"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

# சத்தியவேத பாதுகாவலன்

வாசக நேயர்கள் கவனத்திற்கு!

உங்கள் பாதுகாவலன் சந்தாப்பணத்தைச் செலுத்திவிட்டீர்களா?

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

மலர் 87 | யாழ்ப்பாணம் 1962-ம் ஆ. ஆவணிமீ 12-ம்உ ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 10 | இதழ் 32

# ஆரோபணமானாள்

## அவனியின் அன்னை

யேசுநாதர் இவ்வுலகில் தன் பிதாவின் சித்தத்தைச் சுமுத்திரையாய்ச் செய்து முடித்ததும், பரலோகத்துக்கு ஆரோகணமானார். கடவுளைப் பெற்றெடுத்ததால் கடவுளின் தாயானாள் மாமரி. நாமோ ஞானஸ்நானத்தின்மூலம் யேசுவோடு ஒன்றிப்பதால் மாமரி நமது தாயுமானாள்.

மரியம்மாள் யேசுவின் ஆரோகணத்திற்குப்பின், தன் குமாரனோடு என்றென்றைக்கும் அன்னியோன்னியமாய் வீற்றிருக்கும் நாள் என்றோ என்று ஆவலுடன் காத்திருந்தாள். முப்பத்துமூன்று வருடங்களாக யேசுவுடன் ஒன்றித்து, சிநேகத்தினால் பூரிப்படைந்த ஆத்துமா நித்தியத்திற்கும் அவரை மீண்டும் எப்போது அடையலாம் என்று ஏங்கியது. அவள் ஆவல் நிறைவேறும் நாளும் வந்தது.

என் அன்பே! வெண் புறுவே
வனப்பு வாய்ந்தவளே
விரைவாக எழுந்துவா;
ஏனெனில் குளிர்காலம் கடந்து
விட்டது
மழைக்காலம் முடிந்துவிட்டது
என் அன்பே எழுந்திரு என்
அழகே எழுந்து வா!!



என்ற குரலொலி இன்னிசைபோல அவள் உள்ளத்தை இனிமையாக்கியது. அவள் இதயம் இன்பமயமாகியது. யேசுவுடன் ஒன்றுசேர அவரை அடைந்து முடிவில்லா பேரின்பமடைய விண்ணுலக வீட்டை நோக்கி விரைந்து சென்றாள். அன்னையின் ஆரோபணத்திருநாளன்று, நாம் அவள் ஆன்மசரீரத்தோடும், வெற்றிப்பிரதாபத்தோடும், மோட்சத்துக்குள் பிரவேசித்ததைக் கொண்டாடுகிறோம். அனைத்துலக மக்களும், ஆதித்தாய் தகப்பன் கட்டிக்கொண்ட பாவத்தின் பரிகாரமாகத் தண்டிக்கப்பட்டார்கள். "மனிதா! நீ மண்ணாய் இருக்கிறாய் திரும்பவும் மண்ணாய்ப் போவாய்" இது பாவத்தின் தண்டனை. ஆனால், இத்தண்டனைக்கு விலக்காய் இருந்தாள் அன்னைமரி. ஆம்! பாவமாசு சற்றும் நிழல்படாத மரியின் ஆத்துமமும், அதோடு இணைந்திருந்த அவள் சரீரமும் இவ்விதிக்கு விலக்காகியது.

**ஏன்?**

சரீர அழிவு பாவத்துக்குத் தண்டையாக இருக்க, பாவத்தை ஒரு கணப்பொழுதும் பற்றாக அவள் எப்படி இத்தண்டனைக்கு உள்ளாகமுடியும். அவள் பாவமாசு இன்றித்தோன்றினாள், பாவக்கறை தீண்டப்பெறாமல் வாழ்ந்தாள். எனவே பாவத்தின் தண்டனையை எவ்வாறு அனுபவிக்கமுடியும். ஆதாம் தன் பாவத்தினால், தன் வழித்தோன்றல்களுக்குப் பாவக்கறையைக் கொடுத்தான். ஆனால், ஆதாம் வழங்கிய இந்தப் பரம்பரை உடைமையில், மரியம்மாளுக்குப் பங்கு இல்லாததால் அவள் இத்தண்டனைக்கு உட்படத்தேவையில்லை.

கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் பாவத்தில் வீழ்ந்த அன்று, கருணைக்கடவுள் ஆதித்தாய் தகப்ப

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

## "பிரிவினைச் சிந்தனைகட்கு இடமளிக்காதீர்"

— திரு. வில்மட் பெரேரா

இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரசையும் முதலில் தான் இலங்கையன் என்ற எண்ணத்தைக் கொண்டிருத்தல் அவசியம். அத்தகைய மனோபாவத்துடனேயே வாழவேண்டும். தான் சிங்களவன், தமிழன், இஸ்லாமியன், பறங்கியன் என்றெல்லாம் எண்ணுவதை இரண்டாந்தலைப்பட்சமாகக் கொள்ளவேண்டும் என சம்பள நிர்ணயக் குழுவின் தலைவரான திரு. வில்மட் பெரேரா காலி அர்ச். அலோசியஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தென் மாகாண ஆசிரியர் சங்கத்தில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

அண்மையில் வெளியாகிய தேசிய கல்வி நிர்ணயக்குழுவின் அறிக்கைகள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இக்குழு சர்வகலாசாலைக் கல்விசம்பந்தமாக சமய அடிப்படையில் தேர்வு நடைபெறவேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது. இத்தருணத்தில் யான் எவரையும் எதுசம்பந்தமாகவும் தாக்கிப்பேசுவதை விரும்பவில்லை. சந்திரனுக்கு மனிதன் பிரயாணம் செய்யத் துடித்துக்கொண்டிருக்கும் அளவுக்கு அறிவு மிகுந்துள்ள இக்காலத்தில் கல்விக்கொள்கை நாட்டில் பிரிவினையையும் கசப்பு மனப்பான்மையையும் ஏற்படுத்துவதற்குதவியாக அமைந்துவிடக்கூடாதென்பதையே வற்புறுத்த விரும்புகிறேன்.

அகில உலகத்திலுமுள்ள அறிஞர்கள் இக்கொள்கையை உருவாக்கினோரை எள்ளிநகையாடுவரென்பது திண்ணம். எங்கள் நாட்டில் அரசாங்க உத்தியோகங்களும் சமய அடிப்படையில் நியமிக்கப்படுதல் வேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது. சாதி சமய அடிப்படையில் மக்கள் தங்களிடையே பிரிவினைச் சிந்தனைகளை உருவாக்குதற்கே இக்கொள்கை பயன்படக்கூடும்.

இந்நாட்டில் எல்லாச்சாதிசமய மக்களும் கட்டுப்பாடின்றித் தங்கள் உரிமைகளை அனுபவிக்கவும தாம்விரும்பிய வாழ்க்கையை நடாத்தவும், மதானுசாரங்களைச் செய்யவும் உரிமையுண்டு. இந்த உரிமை சாதிசமய அடிப்படையில் ஒதுக்கப்படுவது நாட்டில அராஜகங்களை உருவாக்குவதற்கே உதவும். அதனால் நாட்டின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படும்.

கடந்தகால பிரிவினைச் சம்பவங்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். எங்கள் வருங்கால சந்ததியினர் சாதிமத வேற்றுமைகளை மனதிலிருந்து களைந்துவிடுதற்கான மார்க்கங்களை கல்விக்கொள்கையாளர் இப்போதே திட்டமிடுதல் வேண்டும்.

## அன்னையின் படையணிகண்ட ஆனந்தவிழா

கடந்த ஆடித்திங்கள் 29-ம் நாள். இலங்கையெங்கணுமுள்ள மரியாயின் சைனியத்தினர் பலர் கொழும்பில் ஒன்றுகூடினர். அப்போஸ்தலிக்க தொண்டில் கடந்த இருபத்தைந்துவருடகாலம் தங்கள் பங்கையெண்ணி அகமகிழ்ந்தனர். வல்லபமிக்கவர் பெருமையுள்ள கருமங்களைத் தங்கள்மூலம் செய்ததையெண்ணி இறைவனைத் தோத்திரித்தனர். கடந்தகால அனுபவங்களைப் பரிமாறினர். வருங்காலத்துக்கான பணிகளையிட்டுச் சிந்தித்தனர். பின்னர் மகிழ்ச்சியுடன் தங்கள் இருப்பிடங்கட்கேகினர் அன்றைய நிகழ்ச்சிகள் சேனையாளரின் வாழ்க்கையிலும், ஈழத்துத் திருச்சபையின் வரலாற்றிலும் சிறப்புப்பெற்றவை என்பது மறக்க முடியாததொன்று.

அன்றுகாலை ஆசீர்வாதப்பர் கல்லூரியைநோக்கிச்சேனையாளர்கள் பலவித வாகனங்களிலும் வந்திறங்கியவண்ணமிருந்தனர். அனைவரதும் உதடுகள் மரியாயே வாழ்களென்றகீதத்தையே இசைத்தன. இலங்கையின் ஒவ்வொரு முக்கிய நகரத்திலுமிருந்து பிரதிநிதிகளை அங்கே காணக்கூடியதாயிற்று. காலை மணி ஒன்பது. ஆசீர்வாதப்பர் கல்லூரி மண்ட[illegible]

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

## அநேக அழைத்தல்கள்

ஸ்பானிய பிறனீஸ் மலைத்தொடரிலுள்ளபஸ்க்கிராமங்களிலிருந்து அநேக அழைத்தல்கள் தோன்றியிருக்கின்றன. 2,362 பேர் குடிசனங்கொண்ட சேனுரியிலிருந்து 311 பேர் குருமார், சந்நியாசிகளாயிருக்கின்றனர். 131 பேரைக்கொண்ட கௌனுவில் 13 குருமார், 7 கன்னியாஸ்திரிமார், 5 குருமாணவருளர். 100 பேரைக்கொண்ட கேர்னு கிராமம் 4 குருமாரையும், 16 கன்னியாஸ்திரிமாரையும், 8 குருமாணவரையும் தந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனச் செய்திகள்

● தன்னுமுனை

## அமலோற்பவ மாதா சபை

தன்னுமுனைப் பங்கைச் சேர்ந்த செங்கலடியில் அர்ச். நீக்கிலாஸ் முனிந்திரர் ஆலயம். சுமார் நான்கு மாதங்களின்முன்பு தன்னுமுனை உதவிக் கட்டளைக்குரவர் வண. எவ். மேதர் அவர்களின் பெருமுயற்சியால் திரு. எக். எம். செல்லத்தம்பு அவர்களைத் தலைவராகவும் திரு. என். ஏ. ஆறுமுகம் அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்ட அமலோற்பவ மாதாசபை செங்கலடியில் ஆரம்பமாகியது.

வாரந்தோறும் புதன்கிழமை பி. ப. 5 மணிக்குத் திவ்வியபூசையின்பின், அமலோற்பவ மாதாசபைக் கூட்டத்து அங்கத்தவர்கள் கத்தோலிக்கசேவை ஆற்றி வருகின்றனர். அயற் கிராமமான கழுவன்கேணியில் கத்தோலிக்கராக விருந்தும் பூசை தேவதிரவிய அனுமானங்கள் ஆகியவற்றை மறந்திருந்த சுமார் 22 பிள்ளைகளையும், அவர்களது பெற்றோரையும் கண்டு அவர்கள் பூசைகாணவும் தேவதிரவிய அனுமானங்களைச் சரிவர நிறைவேற்றவும் ஆவன செய்யப்பட்டுள்ளன.

வியாழக்கிழமை தோறும் கழுவன் கேணியில் பிற்பகல் 5-15 மணிக்குத் திவ்விய பூசையும், குழந்தைகளுக்கு ஞானோபதேச வகுப்பும் நடைபெறுகிறது. இதுவரை ஞானஸ்நானம் பெறுதிருந்த குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், முறையின விவாகஅந்தஸ்தில் உள்ளவர்களை மெய் விவாகமென்னும் தேவதிரவிய அனுமானத்தினால் பந்திக்கப்படவும் வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சில குழந்தைகள் மட்டக்களப்பு மடத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். கத்தோலிக்க பத்திரிகைகள் வீடுகள்தோறும் வாசிக்கவேண்டிய ஒழுங்குகளும் செய்யப்படுகின்றன.

— நிருபர்

● சின்னமடு

## வருடாந்த மகோற்சவம்

ஊர்காவற்றுறையில் சரவணைக்கிராமத்தில் கோவில்கொண்டிருக்கும்தேவ தாயாரின் திருநாள் இவ்வருடம் கோலாகலமாக 5-8-62 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. மேற்படி யாத்திரைத்தலத்தின் திருநாளுக்கு ஆயத்தமாக நவநாள்ஆராதனைகள் 27-7-62-ல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாயிற்று. தினமும் மாலையில் திவ்வியபூசை, செபமாலை, பிரசங்கம், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் நடந்தேறின. ஊர்காவற்றுறைக் கட்டளைக்குரவர் நவநாட் தினங்களில் உருக்கமான பிரசங்கஞ் செய்தார். 4-8-62சனிவாரம் நவதினங்களின் உச்சநிலைஎன்று கூறவேண்டும். அன்றுமாலை 6-30 மணிக்குத் தருக்கப்பிரசங்கத்துடன் ஆரம்பமாயிற்று நவநாள். வண. அல்பிறட் சுவாமியாரும், வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமியாரும் தருக்கப் பிரசங்கத்தைநடத்தினர். மாலை 3மணியிலிருந்தே பக்தர்கள் யாத்திரைத் தலத்துக்கு ஏராளமாகச்சேர ஆரம்பித்தனர்.

அன்று மாலைஆராதனைகள் யாவும் கோவிலின் வடக்குப்பக்கமாய் அமைந்த வெளியிலேயே நடந்தேறின. தேவதாயாரின் திருச்சுரூபம் கோவிலில் இருந்து எடுத்துவரப்பெற்று இதற்கென விசேஷவிதமாய் ஆயத்தஞ்செய்யப்பட்ட பீடத்தருகில் எழுந்தருளச் செய்யப்பட்டிருந்தது. செபமாலையின் பின் பிரசங்கமும் அதன்மேல் திவ்விய பூசையும் நடந்தேறின. வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்கள் திவ்விய பூசைநிறைவேற்றினர். வண. எஸ். பீற்றர்சுவாமிகள் பூசைச் செபங்களும் விளக்கமும்கொடுத்தார். அர்ச். அந்தோனியார் கல்லூரிஅதிபர் வண. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமியவர்கள் பாடகர் கோஷ்டியை வழிநடாத்தினர். பூசையின்பின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்தேறிற்று. பல்லாயிரக்கணக்காக வெள்ளம்போல் பக்தர்கூட்டம் மைதானத்தில் பக்திப்பரவசமாய் முழந்தாள் மடித்துநிற்க, மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட திருப்பவனி வீதி வழியே பரிசாரகர்குருமார் புடைசூழ, தேவதாயாரின் திருச்சுரூபம் அமைதியாகப் பவனிவந்தது. அவ்வமயம் பாடகரும், பக்தர்களும் வண. எஸ். பீற்றர் சுவாமிகளின் வழிநடத்துதலின்கீழ் செபங்களையும், பாட்டுகளையும்பாடி மனமொருமித்துச் செபித்துநின்றதன்மை எவருக்கும் மன அருட்சியைக் கொடுத்தது. தேவதாயாரின் திருச்சுரூபம் பீடத்துக்குமீண்டதும், வண. எஸ். பீற்றர்சுவாமியவர்கள் முன்செபிக்க, அவரைத்தொடர்ந்து பக்தர்கள் உரத்தசப்தமாய்த் தேவதாயாருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தனர்.

மறுநாள் காலை 7-30மணிக்குப் பெரியபாடற்பூசை நிறைவேற்றப்பட்டு, திருநாள்இனிதே நிறைவெய்தியது.

— நிருபர்

தாண்டவன்வெளியில்

## பிரான்சீஸ்கன் மூன்றுஞ்சபை

இவ்வருடம் ஆவணி மாதம் 5ஆம் நாள் தாண்டவன்வெளிச் சரித்திரத்தில் இடம்பெற்ற நாட்களில் ஒன்றாகும். அன்றுதினம் இப்பங்கிற்கு மாத்திரமல்லாமல் திருகோணமலை மேற்றிராசனத்திலேயே குறைவாய் இருந்தசபையொன்றைத் தாண்டவன் வெளிக்கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமிஅவர்கள் நிறைவேற்றி வைத்தார். பத்திச்சுவாலகரை ஒத்தவரும், அர்ச்சியசிஷ்டவர்களில் மிக்க மகிமையானவரும், ஐந்து காயவரம் பெற்றவரும், தாழ்ச்சியில் மிகுந்தவருமான அசீசிப் பதியான அர்ச். பிரான்சீஸ்கு என்பவர் உலகத்தில் சீவித்த காலத்தில், சர்வேசுரனை அறிந்து நேசித்துச் சேவித்து முடிவில்லாத மோட்சபாக்கியத்தை அடையக்கூடியதான சாதனங்களைக் கொண்ட அதிஉத்தமமானதொரு சபையாகிய பிரான்சீஸ்கன் மூன்றுஞ் சபையையே, சுவாமி அவர்கள் இம் மேற்றிராசனத்துக்கெனத் தாண்டவன் வெளியில் ஸ்தாபித்தார்.

அன்று ஞாயிறு காலை இச்சபை ஸ்தாபகத்துக்கு திருகோணமலை மேற்றிராணிஆண்டவர் அவர்கள் சமுகமாய் இருந்தார். காலை 7மணிக்கு திவ்விய பூசையின்முன் இச்சபையில்சேரவிருந்த, தாண்டவன்வெளியில் 6பேர் புளியந்தீவு ஒருவர், புளியடிக்குடா ஒருவர் ஆகிய 8அங்கத்தினரும் பீடத்தின்முன்பாக நின்றனர். கட்டளைக்குரவர் அவர்களுக்குச்சில புத்திமதிகள் கூறினர். தொடர்ந்து அவர்களுக்கு சபைஉடுப்பு கொடுத்த காட்சி மிகவும் மனப்பதியலாகவிருந்தது. பின்மேற்றிராணி ஆண்டகை அவர்களால் இம் மூன்றுஞ்சபையின் மகிமைபற்றியும் சபையார் அனுசரிக்கவேண்டிய பிரதான காரியங்கள் பற்றியும் விளக்கப்பட்டது.

தொடர்ந்து வண. பீற்றர் துரைரெட்னம் சுவாமி அவர்கள் துணைபுரிய ஆண்டவர் அவர்களால் திவ்வியபூசைப் பலி நிறைவேற்றப்பட்டு, திவ்வியநற்கருணைஆசீர்வாதமும் அளிக்கப்பட்டது.

திவ்வியபூசையின்பின் இச்சபையின் ஆரம்பத்துக்காக வந்திருந்த கொழும்பு —கொட்டாஞ்சேனை பிரான்சீஸ்கன் மூன்றுஞ்சபைத் தலைவர் சகோதரர் J. J. இரா[illegible] S. V. பிரான்சிஸ் அவர்களினது சமுகத்தில் கூட்டம் நடாத்தப்பட்டு, பிரதி மாதமும், வரும் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை ஆசீர்வாதத்தின்பின் இக்கூட்டம் நடாத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

—நிருபர்.

# எனது ஆபிரிக்கயாத்திரை—8

## கொலம்பஸ் பிறந்த நகரிலே

— வண. பிரான்சிஸ் ரிப்ளேஅடிகளார்

ஜெனோவாவிலிருந்து குன்றுகளினூடாகச்செல்லும் ஒடுங்கியபாதைகளின்வழியாக எம்பிரயாணத்தைத் தொடர்ந்தோம். உலகின் மிகஅழகிய வீதிகளில் இதுவுமொன்று. சிறுகுன்றுகள், குடாக்கடல்கள், குக்கிராமங்கள், ஒதுங்குதுறைகள்எனபன எம்மை எதிர்நோக்கின. குன்றுகளனைத்தும் பச்சனவான ஒலிவமரங்களால் சூழப்பட்டிருந்தன.

வழியில்தரிசித்த ரப்பலோநகர் சிறியது. சிறப்புள்ளது. சிறந்த உணவுவிடுதிகள் பலநிறைந்தது. ஒருகுடாவின் மேலாக அமைந்துளது. அங்கு ஒரு சிறு துறைமுகமும் உண்டு. அந்நகரின் இல்லங்களனைத்தும் விதவிதமான வர்ணங்கள் தீட்டப்பட்டுச் சோபையுடன் விளங்கின. இவ்வித வர்ணஜாலங்கள் பச்சனவான ஒலிவமரங்களினூடாகக் காட்சிதருவது காண்பதற்கு வெகு கவர்ச்சிமிக்கது.

அடுத்திருந்த போட்டோபைனோ நகர் வனப்புமிக்கது. அழகான மலர்ச் செடிகள் நிரம்பியது. எனினும் இந்நகரைச் சுற்றிப்பார்ப்பதை மழைதடுத்து விட்டது.

### 30 சித்திரை, 1960.

அதிகாலையிலிருந்தே கப்பற்தொழிலாளர்கள் பொதிகளை ஏற்றியிறக்குவதில் மிகத்துரிதமாக ஈடுபட்டனர். பக்கத்திலிருந்த ரயில்பெட்டிகளில் அடுக்கடுக்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பியட் மோட்டார்வண்டிகளைப்பார்த்து ஆச்சரியமுற்றேன். திவ்விய பூசைக்குப்பின்னர் காலையாகாரத்தை முடித்துக்கொண்டு வெளிக்கிளம்பினேன்.

பஸ்வண்டிமூலம் நகரின் மத்திய சதுக்கத்துக்குச் சென்றேன். மத்திய சதுக்கத்தை வெகு நல்லமுறையில் நிர்மாணித்திருக்கிறார்கள். பிரசித்திபெற்ற கார்லோபெலிசி நாடகசாலையும், பங்கு மாற்று நிறுவனங்களும் இங்குதான் அமைந்துள்ளன. சிறிது தொலைவில் யேசுஆலயம் தெரிந்தது. இவ்வாலயம் யேசுசபைக்குருக்களால் நிர்வகிக்கப்படுகிறது. தங்கமய அலங்காரங்களுடன் ஆலயத்தின் உட்பகுதி வெகுகம்பீரமாகவும், பிரகாசமாகவும் காட்சியளிக்கிறது. ஆலயத்தின்உள்ளே காணப்படும் அமைதியும், சாந்தமும் வெளியே இல்லை. நகரின் பிரதானபகுதியாயிருப்பதால் போக்குவரத்துச்சந்தடி மிகவும் அதிகம்.

அடுத்து ஜெனோவாவின் ஆசனக் கோவிலுக்குச் சென்றோம். பீடத்திலிருந்து முகப்புவரை ஆண்களும், பெண்களும் இருவரிசையாக முழந்தாளிட்டிருக்க மேறறிராணியாண்டவர் உறுதிப்பூசுதல் வழங்கிக்கொண்டிருந்தார். பக்கத்தில் ஸ்நாபகயுவானியாரின் சிற்றாலயம் அமைந்துள்ளது. பதினோந்தாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இச் சிற்றாலயத்தின் பீடத்தினடியில் அப்புனிதரின் என்புகள் புதைக்கப்பட்டிருப்பதாக அங்குகூறினார்கள்.

நண்பரொருவருடன் கடைத்தெருவை நோக்கிநடந்தேன். விற்பனவுக்கான பொருட்களையெல்லாம் வெகு கவர்ச்சிகரமாக அலங்கார வரிசைகளில் அடுக்கிவைத்திருக்கிறார்கள். இங்கிலாந்தில்போலவே இங்கும் விற்ப

[8-ம் பக்கம் பார்க்க]

● முல்லைத்தீவு

## வலையன்மடம் அரசினர் பாடசாலைத் திறப்பு விழா

முல்லைத்தீவுப் பிரிவில் உள்ள வலையன்மடம் என்னும் ஒரு சிறிய பிற்போக்கான கிராமத்தில் ஏறக்குறைய 8 வருடங்கட்குமுன்பு ஆரம்பிக்கப்பட்டு அண்மையில் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட இப்பாடசாலையின் நிரந்தரக் கட்டடம் ஒன்று 2-8-62 அன்று வவுனியா பாராளுமன்றப் பிரதிநிதி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

பி. ப. 3 மணியளவில் வலையன்மடப் பாடசாலை மாணவர்களின் ஆடல் பாடல்களுடன், பாராளுமன்றப் பிரதிநிதி, கரைதுறைப்பற்றுக் காரியாதிகாரி முதலியோர் அவ் ஊரவர்களால் வரவேற்கப்பட்டனர். பிரதிநிதி அவர்கள் பாடசாலைக் கட்டடத்தைத் திறந்துவைத்தார். அதன்பின் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கனம். பிரதிநிதி அவர்கள் அச்சிறிய கிராமத்தின் தீவிர முன்னேற்றத்தைக் குறித்து அவ் ஊரவர்களையும் பாடசாலை ஆசிரியர்களையும் பாராட்டிப் பேசினார். அதன்பின் கரைதுறைப் பற்றுக் காரியாதிகாரி அவர்கள் அவ்வூர்க்கிராம முன்னேற்றச் சங்கம் குறுகியகாலத்தில் தீவிர வளர்ச்சி அடைந்திருப்பதாகவும் அக்கிராமத்தை ஒரு மாதிரிக் கிராமமாக ஆக்கித் தருவதாகவும் கூறினர். அதன்பின் வவுனியா மாவட்ட கிராம முன்னேற்ற மேற்பார்வையாளர், முல்லைத்தீவுப் பிரிவு கிராம முன்னேற்ற உத்தியோகத்தர், வண. கட்டளைச்சுவாமி பிராஞ்சீஸ் குலாஸ், திரு. மி. அந்தோனிப்பிள்ளை, திரு. பி. மரியநாயகம், திரு. V.S. அந்தோனிப்பிள்ளை, திரு. இ. ஆறுமுகம், திரு. K. செல்லையா ஆகியோர் முறையே சொற்பொழிவாற்றினர். கி. மு. சங்கக் காரியதரிசி செல்வன் யோ. தாவீது முடிவில் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினர். மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளுடன் திறப்புவிழா வைபவம் இனிதே முடிவாயிற்று.

— நிருபர்

● அநுராதபுரம்

## ஈழத்தமிழ் பெரியார்கள்விழா

சொற்கலைப்புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியார் ஈழத்தமிழ்ப் பெரியார்கள் வரிசைநிரலில் முதலிடம்வகிக்கின்றார்கள்என்று அநுராதபுரத் தமிழ் கழகம்நடத்திய ஈழத்தமிழ் பெரியார்கள்விழாவில் உரைநிகழ்த்திய பண்டிதர் க. யோ. ஆசிநாதன்அவர்கள் கூறினர்.

ஈழத்தமிழ் பெரியார்கள்விழா அநுராதபுரத் தமிழ்கழகத்தாரால் கழகத் தலைவர் திரு. ரூ. ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. அத்தருணம் ஆசிரியர் சிவப்பிரகாசம், ஜனாப் மு. செ. ஹுசைன், பண்டிதர் க. யோ. ஆசிநாதன், வித்துவான் முருகேசன்ஆகியோர் பேசினார்கள்.

இறுதியில் மேற்படி கழகநாடகக் குழுவினரால் "சாம்ராட் அசோகன்" என்னும் ஒருநாடகம்நடித்துக்காண்பிக்கப்பட்டது. ஆசிரியர் பி. ஜூசைப்பிள்ளை, திரு. யேமிஸ் மிரண்டா ஆகியோரின் நடிப்பு மக்களைப் பரவசமடையச் செய்தது. செயலாளர் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## வரிக்குப் பதில்வரிகள்

நிறுத்தப்பட்டுள்ள விற்பனவுவரியால் துண்டுவிழும் சுமார் 6கோடிரூபாவையும் சமாளிக்கும்படியாக உணவுப்பொருட்கள், பெற்றோல், மண்ணெண்ணெய், பத்திரிகைக்காகிதம் ஆதிய பொருட்கள் நீங்கலாக ஏனையபொருட்கள் மீதுள்ள இறக்குமதித்தீர்வைகளை ஐந்திலொருபங்குவீதம் கூட்டுவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இப்புதிய இறக்குமதித்தீர்வைகள் இம்மாதம் 3-ந்திகதி வெள்ளிக்கிழமை நடுச்சாமத்திலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. புடவைகளின் இறக்குமதித்தீர்வை 15சதத்திலிருந்து 18சதவிகிதமாக அதிகரிக்கப்படும். மேலும் அநேகபொருட்களின் இறக்குமதித்தீர்வைகளும், சலுகைத்தீர்வைகளும் உயர்த்தப்படும்.

## மந்திரியின் வாக்குறுதி

யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரியில் போதியதாதிமார் நியமனஞ் செய்யப்படுமுன் தாதிகளாகக் கடமையாற்றும் கன்னியாஸ்திரிமார் நீக்கப்படமாட்டார்களென்று தங்களைக் கண்டுபேசிய ஆஸ்பத்திரிக்கமிற்றிக்குச் சுகாதாரமந்திரியும், சுகாதாரசேவைகளின் பதில்தலைவரும் வாக்குறுதி அளித்திருக்கின்றனர். மேலும் தாதிமாருக்கான புதிய கட்டடத்தையும், தண்ணீர்த்தாங்கிக் கட்டடத்தையும் விரைவிலே பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும், புதியஎக்ஸ்றே சாதனமும், இரணசிகிச்சை நிலையத்திற்குக் குளிர்ஊட்டும் இயந்திரமும் கொடுத்துதவுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## தேசிய கல்வித்திட்டம்

"அரசாங்கம் என்னதான்சொன்ன போதிலும் தேசீய கல்வித்திட்டம் இன்று வெறும்கேலிக்கூத்தாகி விட்டதென்பதை அனைவரும் கண்கூடாகக் காண்கின்றனர்; பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டபோது கல்வித்துறையில் புதியதொரு மறுமலர்ச்சி உருவாகுமென்று கனவுகண்டவர்கள் இன்று ஏமாற்றம் அடைந்துள்ளனர்; தேசியகல்வித் திட்டமென்றபெயரில் நடைபெற்றுவரும் "திருகுதாளங்களை" இந்நாட்டுமக்கள் இன்று நன்குணர்ந்துள்ளனர்; ஒருஇனத்தை ஒழித்துக்கட்ட இன்னோர்இனம் முயற்சித்துக்கொண்டிருக்கும் இந்நாட்டில் தேசீயமயத்திட்டங்கள் வெற்றியளிக்கப் போவதில்லை; ஜனநாயகஆட்சி சிறந்தமுறையில் நடைபெற்றுவரும் நாடுகளில்தான் தேசீயத் திட்டங்கள் வெற்றியளிக்கமுடியும்; இன,மத வேறுபாடுகளைத் தூண்டிவிட்டுச் சர்வசிங்களஆட்சியை நிலைநாட்ட அரசாங்கம் முயற்சித்துவருகிறது; கல்விக்கமிஷனின் சிபாரிசுகளை நோக்கும்போது இது தெளிவாகப் புலனாகிறது" என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் சென்ற 5-ந்திகதியன்று சண்டிலிப்பாய்ப் பாடசாலைப் பெற்றோர்தின விழாவிலே பேசுகையில் கூறியிருக்கின்றார்.

## பரீட்சைக் கட்டணம் இல்லை

இலங்கைச் சர்வகலாசாலைப் புகுமுகப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடம் பரீட்சைக்கட்டணம் அறவிடுவதில்லையென்று சர்வகலாசாலை அதிகாரிகள் சென்ற வெள்ளிக்கிழமை முடிவுசெய்திருக்கிறார்கள். அரசாங்கம் இலங்கைச் சர்வகலாசாலைக்கு நிகழும் வருடத்தில் அளித்திருந்த மான்யத்தில் முப்பதுஇலட்சம் ரூபாவுக்குமேல் வெட்டிக் குறைக்கப்பட்டமையால் இக்கட்டணத்தை அறவிடுவதென்று முன்னர் அவர்கள் முடிவுசெய்திருந்தார்கள்.

## அரைக்கொத்து அரிசி வெட்டு

பங்கீட்டரிசி இரண்டுகொத்திலே அரைக்கொத்துஅரிசியை வெட்டிக் குறைப்பது நிகழும் ஆவணி 27-ந்திகதி திங்கட்கிழமைமுதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று அரசாங்கம் சென்ற வெள்ளிக்கிழமை முடிவுசெய்துள்ளது. அதனால் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளைக் கவனிக்குமாறு சென்ற வெள்ளிக்கிழமை உணவு-வர்த்தக மந்திரி காரியாலயத்திற்கு அது உத்தரவிட்டிருக்கிறது. நிற்க, ஆறுமாதம் முடிவடையுமுன் பங்கீட்டரிசியை இரண்டுகொத்தாய் முன்போலக்கொடுக்க அரசாங்கம் முயலுமென்று சென்ற திங்கட்கிழமை பாராளுமன்ற அரசாங்ககட்சிக் குழுவினருக்குப் பிரதமர் உறுதியளித்ததாகத் தெரியவருகிறது.

## விற்பனவுவரி நின்றது

நிகழும்ஆவணி 1-ந்திகதியன்று விதிக்கப்பெற்று இருதினங்களாக அறவிடப்பட்டுவந்த விற்பனவுவரியை அரசாங்கம் 3-ந்திகதி வெள்ளிக்கிழமை உடனடியாக நிறுத்திவிடலாயிற்று. அதனால் அன்றுமுதல் எந்தவர்த்தகரும் விற்பனவுவரியைச் சாட்டாகவைத்துக் கொண்டு சாமான்களின்விலையைக் கூட்டுவதும், அவ்வரிப்பணத்தை அறவிடுவதும் தகாதசெயலென்று நிதிமந்திரி தெரிவித்திருக்கின்றார். விற்பனவுவரியை உடனடியாக நிறுத்தக்காரணம் அவ்வரியை அறவிடுவதில் நிர்வாகச்சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமையே.

## அவசரகாலநிலை

புரட்சிச் சதிவழக்குவிசாரணை முடிகிறவரை அவசரகாலநிலைமை நீடித்திருக்குமென்று பிரதமர்சிறிமாசெனற்சபையிலே தெரிவித்திருக்கின்றார். நிகழும் ஆவணி 1-ந்திகதியிலிருந்து அவசரகாலநிலைமை மேலும் ஒருமாதகாலத்திற்கு நீடிக்கச்செய்துவிடப்பட்டிருப்பதாகக் கவர்னர்-ஜெனறலால் "கெசற்" மூலம் பிரகடனஞ்செய்யப் பட்டிருக்கிறது.

## துண்டுவிழும் பெருந்தொகை

வருகிற புரட்டாசிமாதம் 30-ந்திகதியுடன் முடிவாகப்போகும் தற்போதைய அரசாங்க நிதிவருடத்திலே திருத்தியமைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தின்படி துண்டுவிழும்தொகை — அதாவது வருமானத்திலும் பார்க்கக் கூடியிருக்கும் செலவுதொகை 54கோடியே 40 இலட்சம்ரூபாவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வளவு அதிகம் கூடுதலானதொகை இதற்குமுன் எந்தநிதிவருடத்திலாவது துண்டுவிழுந்ததேயில்லை.

## தென்னைகளுக்கு ஆபத்து

இலங்கையின் தென்பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரிலுள்ள தென்னைமரங்கள் இன்னதென்று அறியப்படாத ஒருபுதியநோயினால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நோய்கண்டதும் தென்னைமரங்கள் வெடித்துக்காய்ந்து காய்க்காமலிருந்து பட்டுப்போகின்றன. இந்தப் புதியநோய்க்கு நிவாரணம் கண்டுபிடிக்கப்படாவிடில் இந்நாட்டின் முக்கிய விளைபொருட்களில் ஒன்றைத்தருவதான தென்னைகள் அழிந்துவிடுமென்ற அச்சம்பிறந்திருக்கிறது.

## வாழ்க்கைச்செலவுப் புள்ளி

கொழும்பிலே பாவனையாளரின் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை சென்ற ஆண்டிலே 106·4என்று அரசாங்க புள்ளிவிபரப்பகுதி அறிவித்திருக்கிறது.



### ஞா. இ. ஆரோக்கியசாமி அவர்களின்

## தேகவியோகம்

மாதகலை ஜெனனபதியாகக் கொண்டவரும், மேரி ஜேர்மெயின் லில்லி என்பவரின் ஆருயிர்ப் பத்தாவும், திருமதி ராணி அன்ரனிப்பிள்ளை, லியூக், மாட்டீனா, கிளோரா, பிளஸிடஸ் என்போரின் அருமைத் தந்தையும், ஜே. எஸ் அன்ரனிப்பிள்ளையின் பிரிய மாமனாரும், அன்செல்த்தின் அருமைப்பேரனும், ஞானம்மாவின் அன்புச் சகோதரனும், வண. எஸ். ஏ. மைக்கேல்சாமி, அருளானந்தம், மேரி அன்னா ஆகியோரின் சிறிய தகப்பனாரும், வண. எல். ஏ. சிங்கராயர், இசாசரத்தினம், ஞானப்பிரகாசம், அருளானந்தம், யோசவ் ஆகியோரின் மைத்துனருமான இம்மனுவேல் ஆரோக்கியசாமி அவர்கள் சென்ற ஆடித்திங்கள் 16-ம் நாள் திங்கட்கிழமை நடுநிசியில் தன்ஆன்மாவை ஆண்டவர் கரங்களில் ஒப்படைக்கலானார்.

அன்பும், சாந்தமும், நேர்மையும் தழும்பாத ஒழுக்கமும், புன்னகை வதனத்துடன் தன் கடமைகளைக் கண்ணியமாகவும், திறம்படச் செயலாற்றும் வன்மை படைத்த இவர் கொழும்பில் ஜேம்ஸ் வின்லே கொம்பனியில் 38 ஆண்டுகளாக பிரதம லிகிதராக நற்தொண்டாற்றி, இருதய நோயின் காரணமாக 1950-ம் ஆண்டு தன் உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்று, மாதகலில் வந்து வதியலானார். இவர் ஓர் உத்தம குடும்பத்திலுதித்த சிறந்தகத்தோலிக்கனாக விளங்கி வந்தார். இவரின் அரும்பெருங் குணங்கள் மக்களுக்குச் சிறந்த முன்மாதிரிகையாக விளங்கினதுமன்றி, அவர்களின் அன்புக்கும், மதிப்புக்கும் உரித்தானார். இவரைப் பீடித்திருந்த இருதயநோயே இவருக்குக் கூற்றுவனாக அமைந்தது. மரிக்க இருதினங்களுக்குமுன் அந்திய தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப் பெற்றுத் தமது 72-ம் பராயத்தில் அமைதியாக மரணத்திரையினுள் மறையலானார்.

17-ந் திகதி காலை 6-30 மணிக்கு அர்ச். தோமையார் ஆலயத்தில் இவரது ஆன்மசாந்திக்காகத் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. அன்றுமாலை 5மணிக்கு வண. குருப்பிரசாதிகள் எழுவர், சங். கன்னியாஸ்திரிமார், திரளான சுற்றத்தார், நண்பர்கள் முன்செல்ல, வெண்பரி இரதத்தில் இவரது பேழையானது செபம் நிறைந்த மேரையாய்ச் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படலாயிற்று. அங்கே வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமி அவர்கள் இறுதிக் கைங்கரியங்கள் நிறைவேற்றிநிற்க நல்லடக்கம் செய்யப்படலாயிற்று.

காலையில் மலர்ந்து மாலையில் உலர்ந்து போகும் மலரைப்போன்று இவரது சீவியநாட்கள் மறைந்துபோயிற்று. இவரைச் சீவியத்தில் நினைத்தவர்களே! மரணத்திலும் மறவாதீர்.

இவர்பிரிவால் துயருறும்
மனைவி – மக்கள்

122/62

## கோட்டு விற்பனவு

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

புங்குடுதீவு மேற்கு
சுப்பிரமணியம் சபாரத்தினம்
— வழக்காளி

எதிராக

சண்டிக்குளி, கோவில் வீதி ஒழுங்கை
(Tempile Road Lane)

1. பொன்னையா ஜேம்ஸ்உம்,
2. மனைவி மாகிறெற்றும்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3977-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்வரும் ஆதனம் 1962-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 15-ந் திகதி (15-9-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்த ஆதனத்துக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 826/-ம், 5-4-61 தொடக்கம் 17-9-61 வரைக்கும் ரூபா 700/-க்குப் 12% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும். கோட்டுச்செலவு முழுவதும் வழக்காளியால் விட்டுக்கொடுக்கப் பட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி, சண்டிக்குளிக் கோவிற்பற்று, சண்டிக்குளி, பறகுக்காடு இறை "மாதன்தறை" என்னும் காணித்துண்டு முழுவதும் நிலப்பரப்பு 1½-ம், புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும், கிணறும், தென்னைகளும், செய்பயிர் வான்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — வி. இராசையாவினதும், பெண் பூரணத்தினதும் ஆதனம். மேற்கு — கே. முத்துத்தம்பியினதனம். தெற்கு — ஐயாத்துரை பெண் அழகம்மாவினதனம்.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். 1-8-62

1. சம்பத்திரிசியார்கல்லூரி 1850-ல் ஓர் ஆங்கிலப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்த திரு. போய் என்பவர் அதன் முதல் அதிபர்.

2. மகாவந். சமேறியா மேற்றிராணியாருடன் 1862-ல், கார்த்திகைமாசம் இரண்டாந்திகதி ஐந்து கன்னியாஸ்திரிமார் முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்கு வந்தார்கள். எனவே, இவ்வாண்டு அவர்கள் வரவின் நூற்றாண்டாகும்.

3. தொலைபேசி 1876-ல், 'பெல்' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

4. தையற்சூத்திரம் 1830-ல் திமோனியர் என்னும் பிரான்சியரால் கண்டுபிடிக்கப்பட்டது.

5. ஈயக்குண்டு பாதரசத்தில்மிதக்கும்.

6. செவ்வாய், பூமி, புதன், வியாழன், வெள்ளி, சனி, யூறேனஸ், நெப்ரியூன், புளிற்ரோ என்னும் ஒன்பது கிரகங்களும் சூரியனைச்சுற்றி வருகின்றன

7. ஒலி, விநாடிக்கு 1120அடிதூரம்பாயும். ஒளி, விநாடிக்கு 186,000. மைல்தூரம்பாயும்.

8. மிகநீண்ட கழுத்துடையவிலங்கு ஒட்டைச்சிவிங்கி.

9. சருவேசுரன்பால் ஆத்துமங்கொள்ளும்பற்று தேவநேசம் எனப்படும். அது ஞானஸ்நான வாயிலாக இஷ்டப்பிரசாதத்துடன் கடவுள் ஆத்துமத்துக்குக் கொடுக்கும் ஒருவரம். இஷ்டப்பிரசாதம்வளர, தேவநேசம் வளரும். இஷ்டப்பிரசாதம் தேயத் தேவநேசம் தேயும். இஷ்டப்பிரசாதம் அழியத் தேவநேசம்அழியும். இஷ்டப்பிரசாதம் மீண்டுவரத் தேவநேசமும் மீண்டுவரும். அற்பபாவத்தால் தேவநேசம் தேயும். சாவானபாவத்தால் தேவநேசம் அழியும். பச்சாத்தாபத்தால் தேவநேசம்மீண்டும் உண்டாகும்.

10. பொருளாசை என்பது, காசு, பணம், நகை, நட்டு, வீடுவாசல், காணிபூமி, தொழில்துறை தோட்டந்துரவு முதலியபொருட்கள்மேல் செல்லும் ஆசை. இது பாவநிமித்தமான ஒரு ஆசை. இது கட்டுக்கடந்தால், பொய், சூது, பொறாமை, சண்டை, வழக்கு, அடாத்து, அநியாயம், திருட்டு, கொள்ளை, கொலை, முதலிய எண்ணிறந்த பாவங்களை விளைவிக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆவணி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 12 | ஞா. | இஸ்பிரீத்துசாந்து ஆக. பின் 9-ம் ஞாயிறு (வி. ம.) | ப |
| 13 | தி. | காலதினம் (அர்ச். இப்பொலித்துஸ் கசியானுஸ்) | ப |
| 14 | செ. | தேவமாதாவின் ஆரோபணத்தின் ஆயத்ததினம் | ஊ |
| 15 | பு. | தேவமாதா ஆரோபணத் திருநாள் (வி. ம.) | வெ |
| 16 | வி. | தேவமாதாவின் தந்தை அர்ச். சுவக்கின் | வெ |
| 17 | வெ. | அர்ச். சியாசிந்தப்பர் | வெ |
| 18 | ச. | மரியாயின் சனி | வெ |


# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு ஆவணிமாதம் 12-ந் தேதி


## ஆட்சியாளருக்கு ஓர் ஆலோசனை

நெற்றிவியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டுழைக்கும் பாட்டாளிகள், தம்செங்குருதியை உழைப்பாக்கி உடலொடியப் பாடுபடும் உழவர்கள், நாளெல்லாம் கடலில் அலைந்து மச்சங்களைச் சேர்த்து வரும மீனவர்கள், குறைந்த ஊதிபத்துடன் அரைவயிற்றை நிரப்பும் நடுத்தர வகுப்பினர்கள், இவர்களது குடும்பத்தினர்கள் தங்கள் ஓய்வுநேரத்தை இன்பகரமாகப் போக்குவதற்கு — ஒரு சில மணித்தியாலங்களைக் கவலையின்றிக் களிப்பதற்கு உறுதுணையாக விளங்குவது சினிமா.

சினிமா ஒரு கலை. பொழுதுபோக்குச் சாதனம். அறிவூட்டவல்ல அரிய களஞ்சியம். பல்லாயிரவர் உடல் வளர்ப்பதற்குதவியாகவிருக்கும் ஒரு கைத்தொழில். குறைந்த செலவுடன் நிறைந்த பொழுதுபோக்கைத் தரவல்ல அற்புதமானதோர் நிகழ்ச்சி.

திரைப்படங்களால் தீமையும் உண்டு. தீய சஞ்சிகைகளும், நூல்களும் மனிதசமூகத்துக்குப் பெருந்தீங்கை வருவிக்கின்றன. ஆபாச திரைப்படங்களோ அதைவிடப் பன்மடங்கு தீமையைச் சணப்பொழுதில் வித்திட்டு விளைவித்துவிட வல்லன.

சன்மார்க்கத்துக்கொவ்வாத நிகழ்ச்சிகளைத் திரைப்படங்களிலிருந்து பிரித்துவிடுவதற்கென ஆட்சியாளர் தணிக்கைசபையை நிறுவியுள்ளனர். ஒவ்வொரு திரைப்படங்களையும் பார்வையிடுவது, எந்த ஒரு சாதி, சமய, சமூகத்தையாவது புண்படுத்தும் நிகழ்ச்சிகள், அளவுக்கதிகமான ஆபாச அம்சங்கள், நம்நாட்டின் கலாசாரத்தை அவமதிக்கவல்ல செயல்கள் ஆகியவற்றைக் கத்தரித்தல் என்பன தணிக்கையாளரின் அலுவல்கள்.

நம்நாட்டுத் தணிக்கைக்குழுவினர் இதுசம்பந்தமாகப் பொறுப்புடன் நடப்பது போற்றத்தக்கது. ஆயின், பல கேவலமான திரைப்படங்கள், வயதுவந்தவர்கட்குமட்டும் என்றபோர்வையுடன் தணிக்கையாளரை ஏமாற்றிவிட்டு எங்கள் படமாளிகைகட்கு வருகைதருகின்றன.

இவை முதலில் வயதுவந்தவர்கட்கே தீமைக்கிடமாகின்றன. அவர்களின் உடலையும், உள்ளத்தையும், சிந்தனையையும், செயலையும் இத்திரைப்படங்கள் வெகுவாகப் பாதிக்கின்றன. வயதுவராதவர்களை இக்காட்சிகட்குச் செல்லாமற்தடுக்க நம்நாட்டில் இயற்றப்பட்ட சட்டங்கள் இதுவரை நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. நடைமுறையில் அமுல்செய்யவியலாது என்பதையும் ஆட்சியாளர் நன்கு அறிவர். எனவே, இக்கேவலமான காட்சிகளை வயதுவராத இளைஞர்களும், சிறுவர்களும்கூடத் தாராளமாக அனுபவிக்கின்றனர்.

இன்று பலாத்காரம், கற்பழிப்பு, தற்கொலை என்ற தொற்றுநோய்கள் நம் இளைஞரிடையே வேகமாகப் பரவிவருகின்றன. இதற்கு இத்தகைய திரைப்படங்களும் ஒருமுக்கிய காரணமாகும்.

இலங்கையில் இறக்குமதியாகும் திரைப்படங்களின் தொகையைக் கட்டுப்படுத்துவது என அண்மையில் ஆட்சியாளர் தீர்மானித்துள்ளனர். அந்நிய செலவாணி குறைந்துவருவதைத் தடுப்பதும் இந்நாட்டில் தயாராகும் திரைப்படங்கட்கு ஆதரவளிப்பதும் அவர்கள் திட்டம்.

இலங்கையில் இறக்குமதியாகும் திரைப்படங்களைக் கட்டுப்பாடு செய்யும்போது ஆட்சியாளரும் தணிக்கையாளரும் ஒரு கருமத்தைத் கவனிக்குமாறு வேண்டுகின்ருேம். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பலாத்காரம், அளவுக்கதிகமான காதல் நிகழ்ச்சிகளைத் தாங்கி வரும் திரைப்படங்களைத் தாராளமாகத் தடுத்துவிடலாம். சன்மார்க்கத்துக்கடுத்த திரைப்படங்களைமட்டுமே இலங்கைக்குத் தருவித்தல் வேண்டும். அத்துடன் வயதுவந்தவர்கட்குமட்டும் என்ற முத்திரையைத் தாங்கிவரும் திரைப்படக்காட்சிகட்கு வயதுவராதவர்கள் செல்லாதுதடுக்கப் பலமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

இதனுல் நாட்டுக்கும் சமூகத்துக்கும் அதிகபயன் உண்டு. எமது வருங்கால சமுதாயமும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையதாய் விளங்கும்.

## திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் 9-ம் ஞாயிறு

"நீ தவருது இருக்கக் கவனம் எடு" என்னும் இன்றைய பூசையின் சாரம் எமக்கு ஓர் அழைப்புப்போன்று நிற்கின்றது. நாம் இன்னும் வெற்றியடைந்தவர்களல்ல. நமபிக்கையிலேயே சீவித்துவருகிருேம். நாம் பாதுகாப்பாக இருக்கிருேம எனினும் பாதுகாக்கப்படவில்லை. நாம் சாங்கோபாங்க உச்சிக்கு உயரலாம். ஆனல். எம்மிடம ஆங்காரம் இருக்குமானல் மிகவும் துக்கத்துக்குரியவிதமாகக் கீழே விழக்கூடும. எமக்குக் குறிக்கப்பட்ட வழியிலே நாம் பாதுகாப்பாக இருக்கவேண்டும். அதில் நாம் கடைசிவரை நிலைக்கவேண்டும். ஒரு துக்கத்துக்குரிய இன்றைய சம்பவம் "நன்மையின் பால உள்ள களைப்புத்தன்மையே" என்று 12-ம் பத்திநாதபாப்பரசர் சொன்னது சரியாகவே இருக்கிறது. நம்பிக்கையிலே இருக்கும நமது தற்காலிக வாழ்வு ஆண்டவரிலேயே நடுநிலைப்படுத்தப்படவேண்டும். எமது நன்மைகளை எல்லாம் ஆண்டவர்பால் கடைசிவரையும் திருப்பிவரக்கூடியவிதமாக எமது நம்பிக்கை அவரில் நிலைப்படுத்தப்படவேண்டும.

**செபமும் போதகப்பகுதியும்:** சருவேசுரன் எனக்குத் துணைபுரிகிறவர். ஆண்டவரே என்னைப் பாதுகாக்கிறவர் என்னும இன்றைய பிரவேச வாக்கியத்தின் பல்லவி 53-ம் சங்கீதத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகும். சபைச் செபத்திலே சருவேசுரனுக்கு விருப்பமானதையே நாம் அவரிடம் கேட்கச் செய்யும்படி குருவுடன் சேர்ந்து நாம் மன்ருடுகிருேம். அர்ச். பாவுலு அப்போஸ்தலர் கொரிந்தியருக்கு அவர்கள் தவருது இருக்கும்படி கவனம் எடுக்க எழுதியதை அவர் இன்று எமக்கு எழுதுமாப்போல் இன்று நிருபத்தில் வாசிக்கிருேம். "பெற்றுக்கொண்டதைவிட வேறு என்ன எம்மிடம் உண்டு?" என்ற பாவுலு அப்போஸ்தலரின் கேள்வி இதில் நறுமணம் வீசுவதை நாமகாண்கிருேம். ஒருவன் புகழைத் தன்பால் திருப்பிக்கொள்ளுதல் கிறிஸ்துவத் தன்மையற்றதாகத் தோன்றவில்லையா? தேவன் எமது நற்பணபுகளுக்கு மணிமுடிசூட்டும்போது, தமது கொடைகளுக்கே செய்கிருர் என்று அர்ச். அகுஸ்தீனர் சொன்னதை இது நினைப்பூட்டுகிறதல்லவா? அதிலேதான் முழு உண்மையும் அடங்கி இருக்கிறது. எனவே, நாம் தேவனைச் சோதிக்காதவிதமாக நடந்துகொள்ளவேண்டும். நாம முறுமுறுக்காது எமது பாகத்தைச் சரியாகச் செய்தால் தேவன் எமக்குப் பெருகத்தருவார். அவரால் கொடுக்கப்பட்ட நன் நடத்தை நெறியைவிட்டு நாம் அகலாதிருக்கவேண்டும். எமது நன்மையைவிட்டு அகங்காரம் கொள்ளாதிருக்கவேண்டும். ஏனெனில், ஜெருசலேம் தன் அகங்காரத்தால் விழுந்ததுபோல் நாமும் தவறக்கூடும் ஜெருசலேமின் வீழ்ச்சிபற்றிய தீர்க்கதரிசனத்தின் பூர்த்தியைச் சரித்திரம் கி. பி. 70-ம் ஆண்டில் காட்டுகிறது. உண்மையான தேசபக்தன் போன்று யேசுநாதரும் இப்பட்டினத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டார். ஜெருசலேம் தேவாலயத்திலும் எவ்வளவோ மேன்மையான எம்மில் உள்ள தேவனின் ஆலயத்தின் மதிப்பைக் கெடுக்க நாம் செய்யும் கிரிகைகள்மூலம் யேசுவிற்குக் கண்ணீர் வரச் செய்யவில்லையா?

**நற்கருணைச்சடங்கு:** "சருவேசுரா! எனக்குத் தீர்ப்புச் சொல்லும்" என்று குரு தினமும் பூசைத்தொடக்கத்தில் வேண்டுகிருர். அவர் மனிதரின் தீர்ப்பில் நம்பிக்கை வைப்பதில்லை. சருவேசுரனுடைய தீர்ப்புகள் தேனிலும் தேனடையிலும மதுரமாக இருக்கின்றன. இந்த நியாயத் தீர்ப்புகள் அவருடைய கற்பனைகளே. கடைசியில் நாம் மோட்சத்துக்குப் பேறுபெற்றவர்களாகும்படி அவற்றை இப்போதே அனுசரித்துவருவோமாக. அமைதி மன்ருட்டில் திவ்வியபலியிலே எமது இரட்சணிய அலுவல்கள் நிறைவேறுகிறபடியால் அவை எம்மை நல்லவர்களாகச் சீவிக்கச்செய்து மோட்சத்துக்குப் பேறுபெற்றவர்களாக்கும்படி வேண்டுகிருேம். தேவன் எம்முள் இருக்கும்போது எமது ஆத்துமம் எப்படி மோட்சமாக இருக்கிறதோ அதுபோல எமக்குரிய இடம் மோட்சமே. தேவநற்கருணையானது தேவன் எம்முடன் இருப்பதைமட்டுமன்றி அவருடன் எமது கடைசி ஒன்றிப்பையும் குறிக்கின்றது. "எனது மாமிசத்தைப் புசிப்பவன் என்னில் சீவிக்கிருன், நானும் அவனில் சீவிக்கிறேன்." உட்கொண்ட பின் பகுதியில் தேவநற்கருணை எம்மைச் சுத்திகரித்து அவருடன் ஒன்றிக்கும்படி வேண்டுகிருேம்.

நாம் தவருமல் இருக்கக் கவனம் எடுப்போமாக. இயற்கைக்கும் இயற்கைக்கு மேலானவற்றிற்கும் தேவனே கர்த்தா. அவரே எமது விண்ணப்பங்களைக் கேட்கும் பரலோகபிதா. அவர்தான் எம்மைத் தின்மையில்நின்று இரட்சிக்கவேண்டும். நாம் எமது வாக்கினுலும், கிரிகையினுலும், சீவியத்தினுலும் அவரைப் புகழ்ந்து பாடுவதற்கு எமக்கு வரம்தர வேண்டியவரும் அவரே.

## அர்ச். யோண் வியான்னியின் நண்பர் அர்ச்சியசிட்டபட்டம் பெறுவார்

அர்ச். யோண் பப்ரிஸ்ற் வியான்னியால் "புனிதர்" எனச் சீவியகாலத்திலேயே அழைக்கப்பெற்றவரும், அவரால் நன்கறியப் பெற்றவருமான முத். பீற்றர் எய்மார்ட் அண்மையில் அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்டப்படுவார். அதற்கு வேண்டிய இரு முதற்தர அற்புதங்களை அருளப்ப பாப்பு ஒப்புக்கொண்டிருக்கிருர். பிரான்சியரான பீற்றர் எய்மார்ட் 1868 இல் காலமானுர்.

ஐந்து ஆண்டுகளாக மேற்றிராசனக் குருவாயிருந்து, மேறிஸ்ற் சபையில் சேர்ந்து, பின் தாமே [illegible]மார் சபையை [illegible]ர். கொழும்பு, அர்ச். பிலிப்பு நேரியார் ஆலயத்தில் ஞான விசாரணை செய்பவர்கள் இச்சபைக் குருமாராவர்.

ஒப்புக்கொள்ளப்பட்ட அற்புதங்களில் ஒன்று எலும்புச் சயரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்தவண. எயுஜின் வேர்டியர் சுவாமிகள் குணப்பட்டதாகும். அடுத்தது மெல்பனைச்சேர்ந்த திருமதி மரியடோரு பார்ட்டெல்ஸ் குணப்பட்டதாகும்.

1925-ம் ஆ. முத். பட்டம் பெற்ற பீற்றர் எய்மார்ட் இவ்வாண்டு மார்கழி மீ 8 உ அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார அர்ச்சியசிட்டவர்

## அர்ச்சியசிட்ட சுவக்கீனுர்

தேதி — ஆவணி 16

### "தேவாரம்பர்"

அர்ச்சியசிட்ட சுவக்கீனுரைத் "தேவாரம்பர்" எனவும் அழைப்பர். உலக மீட்பராகிய யேசுபிரான் இவருடைய மகளாகிய மரியாயின் உதரத்திலே உதித்ததனுலே இவருக்கு இப்பெயர் வந்தது. அழைக்கப்பட்ட அதி உன்னத பதவிக்கு ஏற்ற குணங்கள் அவரில் அமைவுபெற்றன. பக்தி, தாழ்ச்சி, பொறுமை, சாதுத்தன்மை முதலியகுணங்கள் அவருடைய பிறப்பிலிருந்தே அவரில் விளங்கின. தாவீது இராசாவின் கோத்திரத்திலே பிறந்து, அதைச் சிறப்பித்தவர் இவர்.

### பதிவிரதைக்கு ஏற்ற பத்தா

அக்காலத்திலே அர்ச். அன்னம்மாள் பெத்லகேம் என்னும் சிற்றூரில் பிறந்து, வாக்குக்கெட்டாத புண்ணியங்களுடன் வாழ்ந்துவந்தார். 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' என இவ்விருவருக்கும் விவாகம் நிறைவேறிற்று. தேவ நேச அக்கினிச் சுவாலை எரிந்துகொண்டிருந்த இருதயங்களுடைய இருவரும் விவாக ஐக்கியத்தில் ஒன்றுய்ப் போனதால் தேவ சிநேகத்தில் ஒப்பில்லாது விளங்கிச் சகலருக்கும் முன்மாதிரியாக இருந்தனர்.

### "மலடா! வெளியே போ"

விவாகமாகி அநேகவருடகாலமாகியும் பிள்ளைப்பாக்கியம்இல்லாதிருந்தது அர்ச். சுவக்கீனுருக்குப் பெரும் கவலையைஅளித்தது. இக்குறையை நீக்கச் சருவேசுரனிடம் மன்ருடிவருவார். ஒருநாள் இவர் தேவாலயத்தில் காணிக்கை செலுத்தும் சமையம் ஒரு குரு இவரை வெளியே தள்ளி, "மலடா! தேவாலயத்தில் காணிக்கை செலுத்த நீ தகுதிஇல்லாதவன்" என்று கூறிவிட்டார். இச்சம்பவம் பெரும் மனவேதனையைக் கொடுத்தபோதிலும் அதைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு, முன்னிலும்கூடிய பயபக்தியுடன் மன்ருடிவந்தார்.

### "தாழ்த்தப்பட்டவர்உயர்த்தப்படுவர்"

சர்வேசுரன் இரக்கம் காட்டும் காலமும் வந்தது. "பாக்கியமுள்ள ஒரு குழந்தையை உனக்குக் கட்டளையிடுவோம்"என ஒரு சம்மனசின் வழியாக அவருக்கு அறிவிக்கப்பட்டது. அவரது இருதயம் சந்தோஷத்தினுல் மலர்ந்தது. குழந்தையும் பிறந்தது. அக்குழந்தையினுல் அவர் அனுபவித்த சந்தோஷத்துக்கும், வரப்பிரசாதங்களுக்கும் அளவில்லை இதனுலன்றே சுவக்கீனுர் புண்ணியங்களில் சிறந்து, அர்ச்சியசிட்ட பதவியையும அடைந்துகொண்டார்.

### அப்பாவும் மகளும்

தனக்கு வந்த இத்தனை பாக்கியத்துக்கும் காரணம் தமது திருக் குமாரத்தியாகிய கன்னிமரியாயே என்று உணர்ந்து அவரை மிகவும் நேசித்துவந்தார். புத்திரியைக் கணமேனும் விட்டுப்பிரிந்திருக்கமாட்டார். கண்ணை இமை காப்பதுபோல் தமது பிரிய புத்திரியைச் சுவக்கீனுரும், அன்னம்மாளும் சகலவிதமான ஆபத்துகளிலிருந்தும் காத்துவந்தனர். ஆனுல், இளம் வயதிலேயே கன்னிமரியம்மாள் தம்மைத் தேவாலயத்தில் ஒப்புக்கொடுத்துவிடவேண்டுமென்று பெற்றோரைக் கேட்டபொழுது, யாது தடையுமின்றி இருவரும தேவ சித்தத்துக்குப் பணிந்துநின்றனர். புத்திரியைத் தேவாலயத்தில் ஒப்புக்கொடுத்ததன் பின் சுவக்கீனுரின் நேரம் செபதியானத்திலேயே கழிந்தது. பிதாப்பிதாவாகிய அர்ச். சுவக்கீனுர் 80 வயதுமட்டும் சீவனேடிருந்ததன்பின் தேவதாயாரின் உதவியினுல் பாக்கியமான மரணத்தை அடைந்தார் என வேத சாஸ்திரிகள் எழுதியிருக்கின்றனர்.

### பெற்றேரே! கேளுங்கள்

அர்ச். சுவக்கீனுரின் சீவியத்திலிருந்து பெற்றேராகிய நாம் இருவிஷயங்களைப் படித்துக்கொள்வோமாக.

1. பிள்ளை வளர்ப்பு. தேவதாயாரின் பெற்றேர் தமது புத்திரியை எவ்வாறு கண்ணுங்கருத்துமாய் வளர்த்துவந்தார்களோ அவ்வாறே ஆன்ம விஷயங்களிலும் எமது பிள்ளைகளின் வளர்ச்சியில் மிக விழிப்புடையவர்களாய் நாம் இருக்கவேண்டும்.

2. தேவ அழைத்தலுக்கு ஒத்துழைப்பு. தேவதாயார் சிறுவயதிலேயே தம்மைக் காணிக்கையாகக் கோவிலில் ஒப்புக்கொடுக்கும்படி கேட்டதும், யாதுதடையுமின்றி அர்ச். சுவக்கீனுர் செய்ததுபோல் தேவ தொண்டுக்கு அழைத்தலைப்பெற எமது பிள்ளைகளுடன் நாமும் ஒத்துழைக்கவேண்டும்.

# இருளில் ஒளி

(34)

## இறைவனே என்னைத் தெரிந்துகொள்ளும்

திரு. எல்மர் ஜேர்விஸ் எழுதுவது :

மருத்துவரும் கைவிட்டுவிட்டார். அன்னை மரிக்கப்போவதை உணர்ந்தாள் ஆறுவயதுச் சிறுமி கிளேயர். வியாதியின் கொடுரங்களனைத்தையும் அனுபவித்தபின் மரணப்படுக்கையை அடைந்த அன்னையின் பக்கலில் முழந்தாளிட்டாள்.

இறைவனே எனது அன்னையைக் காப்பாற்றும். அவளுக்காக என்னை எடுத்துக்கொள்ளும் எனக் கைகூப்பி இறைஞ்சினுள். பிஞ்சு நெஞ்சத்திலிருந்து உதித்த வேண்டுதலை, பால்வடியும் வதனத்திலிருந்து சொரிந்த கண்ணீர்த்துளிகளை நல்லதேவன் புறக்கணிக்கவில்லை,

அன்னை சிறிதுசிறிதாகக் குணமடையவாரம்பித்தாள். சிறுமியும் மகிழ்வுகொண்டாள். தனது நேர்த்தியின்படி இறைவன் தன்னை அழைக்கும் தினத்தை ஆவலுடன் எதிர்நோக்கினுள்.

காலம் கடந்தது. உயர்கல்விக்காக பக்கத்திலிருந்த நகருக்குச் சென்றுள் குமாரி கிளேயர். அங்கு அத்தையின் இல்லத்தில் தங்கினுள். தெருவின் ஒரு பக்கத்தில் அவர்களது இல்லம் அமைந்திருந்தது. மறுபக்கத்திலிருந்த கன்னியர்மடத்தை அடிக்கடி உற்று நோக்குவாள் கிளேயர். அங்கு காட்சியளிக்கும் கறுப்புஉடையணிந்த கன்னியர்கள் அவள் மனதில் சிந்தனைக்கு இடமாவர். அக்கன்னியர்கள்பற்றி ஒருதினம் அத்தையிடம் வினுவினுள்.

தங்கள் வாழ்வின் இன்பங்களை ஆண்டவனுக்காகத் தியாகம் செய்தோர் அவர்கள். அன்பால் உலகையாள்வது அவர்கள் இலட்சியம் எனக் கன்னியர்கள்பற்றி விபரித்தாள் அத்தை. மடத்துச் சீவியம் உண்மையிலேயே ஒருவர் தன்வாழ்வை இறைவனுக்கு ஒப்படைப்பதுதான் என்பதை உணர்ந்தாள் குமாரி கிளேயர். சிறு வயதில் இறைவனுக்களித்த வாக்கை நிறைவேற்ற இதுவே சிறந்த வழிஎனவும் முடிவுசெய்தாள்,

உயர்தரக்கல்விபூர்த்தியாகிய அடுத்த தினம். கன்னியர்மட வாயிலில் காத்திருந்தாள் கிளேயர். வேதஉபதேசம் பெற்றுள். ஞானமுழுக்கினுல் சத்தியதிருச்சபையுடன் இணைந்தாள். தன்வாழ்வையும் இறைவனுக்கு அர்ப்பணித்து கன்னிகையாகவும் மாறிவிட்டாள்.

—சா. பெ.

# ஐரோப்பிய ஒற்றுமைக்கு அழைப்பு

ஐரோப்பிய பொதுச்சந்தையிற் சேருவதற்குப் பிரித்தானியா பேச்சு நடாத்திக்கொண்டிருக்கும் இவ்வேளை, ஐரோப்பிய ஒற்றுமை இயக்கத்தின் முன்னணியில் கத்தோலிக்கர் நிற்கவேண்டுமென்ற வேண்டுகோள் வத்திக்கானிலிருந்து விடுக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாட்டுத்தலைவர் இந்நோக்கத்திற்காக உழைக்கும்படி எட்டு ஆண்டுகளுக்குமுன் 12-ம் பத்திநாதர் கேட்டிருந்தார், எனப் பாப்புவின் அரசாங்கக் காரியதரிசி கருதினுல் சிக்கொஞ்ஞானி கூறினுர்.

பொதுவான ஆன்மீகக் கருத்துகளே ஐரோப்பிய மக்களை ஒன்றுபடுத்தின, எனக் கூறி, கடந்த 2,000 ஆண்டுகளாக ஐரோப்பியரை ஒன்றுய்இயக்கியது கிறிஸ்துவமே எனக் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒற்றுமை இயக்குநர் கவனிக்கவேண்டியவை :

1. தனித்து இயங்குவதையும் தேசிய குறுகிய மனப்பான்மையையும் எதிர்த்தல்.

2. ஒரு இனத்தவரோ குழுவினரோ இன்னெரு இனத்தவரால் பாதிக்கப்படல்.

3. இசைவான பொதுப்பொருள் நலவிருத்திக்காகத் திட்டம் தீட்டல்.

4. கடுமையான சமூக வேறுபாடுகளை அழித்தல்.

5. தகுதியான வாழ்க்கைப்படியை எல்லோருமனுபவிக்கச் செய்தல்.

6. குடும்பவாழ்வை நிலைப்படுத்துதல்.

7. நாடிருந்து நாடு மாறுபவருக்கு உதவுதல்.

சுயநாட்டின் விவசாய, பொருளாதார வேறுபாடுகளை அழிப்பதில் பிறகண்டங்களின் தேவையையும் மனத்திருத்த வேண்டும்; அவர்களுடைய முன்னேற்றத்தையும் கவனிக்கவேண்டும். மேலும் புதுஐரோப்பாவை உருவாக்குவதில் தொழில், கலாசாரச் சங்கங்களில் [illegible] டுமெனவும் [illegible]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3744

128/3, உவாட்பிளேஸ், கொழும்பு.

1. ஞானகாந்தி ஜறேன் இராசரத்தினம்
2. அவரின்புருஷன் செல்லத்துரை இராசரத்தினம் —வழக்காளிகள்.

எதிராக, யாழ்ப்பாணம் தற்போது டிப்பாட்மென்ற் யுச்புல் ஒவென்டேர்ஸ் பிறிசின் உவாட்டேர்ஸ், நீர்கொழும்பு.

1. கிறேஸ் இரஞ்சிதமலர் சின்னையா
2. அவரின்புருஷன் கிருபைராசா சின்னையா —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3744-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆல் புரட்டாசி மீ 1-ந்உ (1-9-62) சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை : முதல்வட்டி ரூபா 15,925-ம்,இதற்குத்தீர்வை ரூபா 15,000-க்குப் 16-11-60 திகதிதொடக்கம் 16-6-61 திகதிவரைக்கும் 100-க்குப் 12வீத வட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும்வரைக்கும் 5வீதவட்டியும். செலவு தொகையால் ரூபா 250 கொடுபட்டது. மிகுதி கழித்துவிடப்பட்டது. மேலும் முத்திரைச்செலவு ரூபா 15|.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளி இறை, "முதலைக்குளம் வயல்" பரப்பு நெல்லு இலாச்சம் 11, குளி 5-உம், கிணறும், வீடும். இதில் கிழக்குப்புறமாக நெல்லு இலாச்சம் 5, குளி $8\frac{1}{2}$-யும், கிணறும், புதுவீடும். குறித்த பரப்பு நெல்லு இலாச்சம் 5, குளி $8\frac{1}{2}$-க்கும், கிணற்றுக்கும், புதுவீட்டுக்கும் எல்லை ; கிழக்கு—வஸ்தியாம்பிள்ளை அலேசுவின் உரிமைக்காரருக்குரிய காணி. வடக்கு—[illegible] அம்பலவாணர் [illegible]பாவுக்குரிய காணி. தெற்கு—பிரான்சிஸ் அலெக்சாண்டர் திசவீரசிங்கத்துக்கும், ஞானமுத்து கைம்பெண் முத்தம்மாவின் உரிமைக்காரருக்கும் மறுபெயருக்கும் உரியகாணிகள். இதடங்களும்.

சி. செ. மாரிமுத்து
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

சித்தங்கேணி, 9-7-1962.

127/62

### யப்பான்

யப்பானிய தேசத்தில் கத்தோலிக்க மதம் வேகமாகத் தழைத்துவருகிறது. ஆயினும் இதுகாலவரை அங்கு அமலோற்பவசபைக்குருக்கள் எவரும் அபிஷேகிக்கப்பட்டதில்லை. கடந்த ஆனி 24-ல் இக்குறை தீர்ந்தது. அமலோற்பவசபைப்பரித்தியாக யப்பானியரொருவர் அன்று அபிஷேகம் பெற்றுக்கொண்டார்.


### வத்திக்கான்

திருச்சபையின் இளவரசர்கள் என அழைக்கப்படும் கர்தினுல்மாரில் வயதில் முதிர்ந்தவரான பிரான்சிஸ்கோ மோரானே ஆண்டவரவர்கள் கடந்த ஆனிமாதம் 8-ந் தேதியன்று தமது 90-வது பிறந்ததினத்தைக்கொண்டாடினுர். இக்கர்தினுல் வத்திக்கானின் நிர்வாகக் குழுவில் அங்கம் வகிப்பவராவர்.

### கொரியா

அண்மையில் கொரியாவில் தோமாஸ் குயின்லன் மேற்றிராணியார் இலவச மருத்துவமனையொன்றைக் கிறிஸ்துவ சடங்கானுசார முறைக்கிணங்க ஆரம்பித்துவைத்தார். இம்மருத்துவமனையை உருவாக்கும் செலவில் பாதியை ஜெர்மானிய கத்தோலிக்கர்கள் உதவினர். மிகுதிப்பணம் அமெரிக்க அயர்லாந்த நண்பர்களால் அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என் செல்வச்சிறுவர்களே ! உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்.

நீங்கள் சிறுவர்களாக இருக்கும்போது, நல்லொழுக்கங்களைப் பழக வேண்டும். தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்என்பது முதுமொழி. ஆதலால் அடக்கவொடுக்கம் சிறுபராயத்தில் பயிலவேண்டிய தொன்ருகும்.

இன்பங்களை நுகரவேண்டுமென்னும் ஆசை மக்கள் எல்லாருக்கும் உண்டு. எல்லாவற்றையும் அறியவேண்டுமென்னும் ஆசையும், அன்புகொள்ள வேண்டுமென்னும் அவாவும் ஆத்துமத்துக்குண்டு. உண்ணல், உறங்கல், காணல். கேட்டல் முதலிய ஐம்புல நுகர்ச்சிகளை உடல்விரும்பும்.

இவ்வேட்கைகளையெல்லாம் அமைத்தவர் கடவுள். கடவுள், ஒவ்வொரு வேட்கையையும் ஒவ்வொரு நோக்கத்தோடு அமைத்திருக்கிருர். உதாரணமாக உடலில் உயிர்நிலைத்திருப்பதற்கு உண்ணவேண்டும். அதனுல் உண்ணல் ஆசையைக் கடவுள் அமைத்தார். உண்பதினுல் உடல்வளரும், அதனுல் உண்டாகும் இன்பத்தையும் பெறலாம். இது கடவுளின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகும். ஆனுல், போசனப்பிரியத்துடன் அளவுக்குமிஞ்சி உண்ணுணுதல் அவசியமில்லை. அங்ஙனம் மிதமிஞ்சி உண்பதின் நோக்கம் உண்ணுவதில் உள்ள இன்பத்தைமட்டும் நுகர்வதற்காகச் செய்யும் ஒரு செயலாகும். கடவுளின் நோக்கம் இங்கு நிராகரிக்கப்படுகிறது.

ஆதலால், எந்த நோக்கத்தோடு ஒவ்வொரு இன்பத்தையும் கடவுள் அமைத்தாரோ, அந்தநோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு அந்தந்த இன்பத்தைநுகர்தல் நல்வினையாகும். அந்தநோக்கத்தைக் கைவிட்டு, வெறும்இன்பத்தைமட்டும் நுகர்வது பாவமாகும்.

எனவே, பாவம் விளையும்வகையில் இன்பங்களை நாடாமல், நன்மைவிளையும் வகையில் அவற்றைவிரும்பும்படி ஆசைகள் அடக்கி ஆளப்படவேண்டும். ஆசைகளை அடக்கி மட்டுப்படுத்தாவிட்டால் பாவம்விளையும். சிற்றின்பஆசைகள் பெருகும். பேரின்பஆசைகுறையும். மோட்சத்தை இழந்து, நரகத்துக்கு ஆளாகநேரிடும். எருதுமாட்டுக்கு மூக்கணுங்கயிறும், குதிரைக்குக் கடிவாளமும், மோட்டாருக்கு 'பிறேக்'கும் எவ்வாறு அவசியமோ, அவ்வாறே ஆசை அடக்கம் ஒவ்வொருவருக்கும் அவசியம்.

ஆதலால், என் அன்புச்சிறுவர்களே! ஆசைகளை அடக்கிப்பழகுங்கள், அது உங்களைத் தேவதூதர்களுக்கு நிகர் ஆனவர்களாக்கும்; பேரின்பப் பெருவாழ்வாகிய மோட்சபாக்கியத்தை உங்களுக்குப் பெற்றுத்தரும். வணக்கம்,

அன்புள்ள அண்ணு.

## பரலோகத்தின் பாலர்கள்

ஒருநாள் சீஷர்கள் யேசுநாதரிடத்தில் சென்று: "பரலோக இராச்சியத்திலே அதிகப் பெரியவன் யார் என்றுநினைக்கிறீர்"? என்று கேட்டார்கள். அப்போது யேசுநாதர் ஒருபாலனை அழைத்து அவர்கள்நடுவில்நிறுத்தி, "நீங்கள் மனந்திரும்பிப் பாலர்களைப்போல் ஆகாவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள். ஆகையால் இப் பாலனைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனே அவனே பரலோக இராச்சியத்தில் அதிகப் பெரியவன்" என்ருர்.

சிறுவர்களே! நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள்! யேசுநாதர் உங்களிடத்தில் அணைகடந்த அன்பு வைத்திருக்கிருர் பார்த்தீர்களா? இதுமட்டுமல்லாமல் உங்களைக் கண்ணிமைபோல் காத்துவருபவரும், உங்களுக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் தருபவரும் அவரே!

இப்படி உங்களுக்கு அன்புசெய்யும் அவர் உங்களை ஒருநாள் பரலோகத்தில் காணவிரும்புகிருர், நீங்கள் இன்று இருக்கும் குழந்தை உள்ளத்தோடு என்றும் இருந்தால்தான் நீங்கள் மோட்சம் போகலாம். மோட்ச இராச்சியத்தில் உங்களுக்காக அவர் ஏற்படுத்தியிருக்கும் சந்தோஷத்தையும் நீங்கள் அனுபவிக்கலாம்!

எனவே நீங்கள் குழந்தை உள்ளத்தோடு அவரை நேசியுங்கள்! என்றும் குழந்தையுள்ளத்தோடு இருக்கப் பிரயாசைப்படுங்கள். உங்களை அதிகமதிகமாய் நேசிக்கும் அவரை உங்கள் மலர் உள்ளங்களில் இருத்தி அவரை வாழ்த்துங்கள்.

## நற்சிந்தனை

மனிதரையாவது, ஏனையபடைப்புக்களையாவது மிதமிஞ்சி நம்புகிறவன் ஏமாந்துபோவான். உன்னைப் படைத்தவரைமட்டும் மனமார நம்பியிரு; அவருக்காகப் பிறருக்குப் பணிவிடைகள்செய். உன் கெட்டித்தனத்தைநம்பாதே; கடவுளின் வல்லமையில் நம்பிக்கைகொள்.

உன்படிப்புத்திறமையில் நம்பிக்கைகொள்ளாதே; பெருமைஉள்ளவர்களைத் தாழ்த்தி, தாழ்மைஉள்ளவர்களை உயர்த்தும், கடவுளின் அருளில் நம்பிக்கைகொள்.

உன்கல்விச் செருக்கைக் கைவிடு, ஏனெனில். அது கடவுளில் உனக்குள்ள விசுவாசத்தை அழிக்கும். பெரியோருக்கு உன்னைக்கீழ்ப்படியவிடாது. கல்விச்செருக்கு பிடிவாதத்தை உண்டுபண்ணும். அது உன் அபிப்பிராயத்துக்கு வேறுபட்ட கருத்துக்களையெல்லாம் தவறு என்றுதள்ளிவிடும். அதனுல் வாக்குவாதமும், போட்டியும், சண்டைசச்சரவும் உண்டாகும்.

உன் அழகைப்பற்றியும், தோற்றத்தைப்பற்றியும் பெருமைகொள்ளாதே; அற்பநோய் அவற்றையெல்லாம் அழித்து அவலட்சணமாக்கிவிடும்.

உன்திறமையைப்பற்றிப் பெருமைகொள்ளாதே; அது எவ்லாவற்றையும் உனக்குக்கொடுத்த கடவுளை அவமதிப்பதாகும்.

உன்னிடம் நன்மைகள் ஏதாவது இருக்குமாயின் அதைப்பற்றிப் பெருமைகொள்ளாதே; பிறரிடம் உன்னிலும் அதிகமான நன்மை உண்டென்று எண்ணிக்கொள்.

# வினவிடை அரங்கு

(1) சம்பத்திரிசியார் கல்லூரி எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதன் முதல் அதிபர் யார்?

(2) திருக்குடும்பக் கன்னியாஸ்திரிமார் யாழ்ப்பாணத்துக்கு முதன்முதலாக வந்தது எப்போது?

(3) தொலைபேசி யாரால் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?

(4) தையற் சூத்திரம் எப்போது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

(5) ஈயக்குண்டு எத்திரவத்தில் மிதக்கும்?

(6) சூரியனைச்சுற்றிவரும் கிரகங்கள் எவை?

(7) ஒலி, ஒளி, ஒருவினுடிக்கு எவ்வளவு தூரம்பாயும்?

(8) மிகநீண்ட கழுத்துடைய விலங்குஎது?

(9) தேவநேசம் என்ருல் என்ன? அதன் தன்மைஎன்ன?

(10) பொருளாசை என்ருல்என்ன? அதனுல் விளையும் தீமைகள் எவை?

(விடை 3-ம்பக்கம் பார்க்கவும்)

## இளைஞர்களே! நற்தோழர்களே!!

இளைஞர்களே நற்தோழர்களே, எங்கள்
ஈழத்தின் எதிர்காலப் பெரியோர்களே,
ஏற்றமுடன் உம் வாழ்வின் நலம்விரும்பி,
சாற்றும் இன்மொழியை ஏற்றிடுவீர்.

●

அமலன் யேசுவை நிதம்பணிந்து போற்றி,
ஆண்டவனே! எம் மாசு அகற்றுஎன வேண்டி,
இனிய நற்செயல் செபதபம் பல இயற்றி,
ஈன்றெடுத்த பெற்ருேரை ஏந்தி வாழ்த்திடுவீர்.

●

உத்தமராய் உலகெல்லாம் புகழ்ந்துபேச,
ஊழியத்தால் உலகைக்காக்கும் சற்குருவை வாழ்த்தி,
என்றென்றும் கடமைதனில் கண்ணியமாய்,
ஏகபரன் யேசுவிற்காய் திருமறைத்தீபமாய் திகழ்ந்திடுவீர்.

●

ஐவகைச் சீலமும் சிறப்பும் பொருந்த,
ஒன்றே தெய்வம் அவனே அரசன் எனச்சாற்றி,
ஓதுதற்கரிய யேசுவின் நாமம் என்றும் ஓதி,
ஔவியம் பேசாது சீலனுய் அன்னைமரி புதல்வனுய்
விளங்கிடுவீர்.

எ. எம். அல்பேட்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3590

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

தெல்லிப்பளை
1. ஜேக்கப் தாமோதரம் தம்பிரத்தினமும்
2. மனைவி சுகிர்தமலரும்

— வழக்காளிகள்

எதிராக
அச்சுவேலி வடக்கு
1. சூசைப்பிள்ளை கிறிசோஸ்திரமும்
2. மனைவி மேரி ரேசலினும்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3590-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1962-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 22-ம் தேதி (22-9-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 9,830/-ம், 31-8-60 தொடக்கம் 23-3-61 வரைக்கும் ரூபா 7,500/-க்கு 9% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும், கோட்டுச் செலவு 267 ரூபா 40 சதமும். தீர்வைத் தொகையில் ரூபா 1,925/-ம், கோட்டுச் செலவில் ரூபா 175/-ம் கொடுபட்டுள்ளன.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப் பகுதி, அச்சுவேலிக் கோவிற்பற்று, பத்தமேனி இறை, "இராமியன் குருக்கட்டு" என்னும் காணித்துண்டு முழுவதும் நி. ப. 22. இதில் மேற்குப்பக்கமாக நிந்தமாக நி. ப. 20. ஆனுல், அளவைப்படி நி. ப. 19½-ம், இயந்திரம் பூட்டப்பட்ட கிணறும். எல்லை: கிழக்கு – இக்காணியிருந்து விடப்பட்ட ஒழுங்கை. வடக்கு — மரியாம்பிள்ளை பிலிப்பையாவினதும், பங்காளரினதும் ஆதனம். மேற்கு — செல்லையா துரைநாயகத்தின் ஆதனம். தெற்கு — பொன்னையா ஐயாத்துரையினதும், பங்காளரினதும் ஆதனம். இதடங்கலும். பதிவு எண்: K. 200/95.

2. ஷெ அச்சுவேலி வடக்கு இறை, "தம்பனைச் கலட்டியும், சிற்றம்பல வனமும்" என்னும் காணித்துண்டு முழுவதும் நி. ப 5 குளி 9 11/32-ம், கல்வீடும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு — வஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசத்தின் ஆதனம். வடக்கு —ரேட்டு. மேற்கு—ஒழுங்கை. தெற்கு —கென்றி செல்வராசாவுக்குரிய ஆதனம். இதடங்கலும். பதிவு எண்: K. 190/191.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். 1-8-62


## நன்றித் துதி

பரிசுத்த சதாசகாயமாதாவிடமும், அவரின் திருப்பத்தாவாகிய அர்ச். சூசைமாமுனிவரிடமும், அன்பும், தயைதயாளமும் உடையவரும், கைநெகிழப்பட்டவர்களின் விசேஷ நம்பிக்கையும், பாதுகாவலருமான அர்ச். யூதாததேயுவிடமும் நான்கேட்ட மன்ருட்டு அனுகூலமானதையிட்டு நேர்த்திப்பிரகாரம் இதைப் பிரசுரஞ்செய்கின்றேன்.

இராணி இராசசூரியர்,
நெடுந்தீவு கிழக்கு.

துர்மாதிரிகை ஒரு முட்டையைப் போன்றது; அது பொரித்தவுடன் அதற்குச் சிறகுகள் வந்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தொல்புரம்
கந்தையா செல்லத்துரை
— வழக்காளி.
எதிராக
வட்டுக்கோட்டை கிழக்கு
சின்னத்தம்பி சுப்பிரமணியம்
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3381-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆல் புரட்டாதிமீ 8-ந்வ சனிக்கிழமை பிற்பகல் 4½மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்ரூபா 2,585-34. இதில் ரூபா 2,000-க்கு 21-5-60 திகதிதுவக்கம் 2-5-61 திகதிவரைக்கும் 8வீதவட்டியும், பின் 3-5-61 திகதிதுவக்கம் இறுபடும்வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 224ரூபா 72சதமும்.

### காணி விபரம்

வட்டுக்கோட்டை கோயிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்குஇறை, 'குளிம்பன்' நெற்பரப்பு 22-ம், கிணறும், பனைகளும். எல்லை: கிழக்கு — செல்லையா பெண் தெய்வானைப்பிள்ளைக்கும், அம்பலவாணர் பெண் அன்னப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். வடக்கு — முருகேசு கார்த்திகேசுவின் உரிமைக்காரர்களின் ஆதனமும், பெண் வள்ளியம்மைக்கும், செல்லையா பெண் தெய்வானைக்குமுரிய ஆதனங்கள். மேற்கு — முருகேசு பெண் தெய்வானைக்கும், தாமோதரம்பிள்ளை பெண் இரத்தினத்தின் உரிமைக்காரர்களின் ஆதனங்கள். தெற்கு — தாமோதரம்பிள்ளை பெண் இரத்தினத்தின் உரிமைக்காரர்களின் ஆதனமும், முருகேசு பெண் வள்ளியம்மையின் ஆதனமும். இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

சித்தங்கேணி, 28-7-62.

129/62

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு
காலஞ்சென்ற
1. பெருமையினார் வரதராசாவும்
2. கைம்பெண் விசாலாட்சிப்பிள்ளை தானாகவும் தனதுகணவனின் கோட்டால் நியமிக்கப்பட்ட தத்துவகாரி
— வழக்காளிகள்.
எதிராக, பண்டைத்தரிப்பு
நாகலிங்கம் அருளம்பலம் — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1678-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆல் புரட்டாசிமீ 15-ந்வ சனிக்கிழமை முற்பகல் 9½மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்ரூபா 16,950 இதில் ரூபா 12,000-க்கு 7-6-57 திகதிதுவக்கம், 24-1-61 திகதிவரைக்கும் 6வீதவட்டியும் பின் 25-1-61திகதிதுவக்கம் இறுபடும்வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 406ரூபா 59சதமும்.

### காணி விபரம்

பண்டைத்தரிப்பு கோயிற்பற்று பண்டைத்தரிப்புஇறை, "குளியவுடை" நிலப்பரப்பு 11-உம், கடைகளும், கல்வீடும், செய்பயிர்களும், கிணறும். எல்லை: கிழக்கு — கைஒழுங்கை. வடக்கு — ரோட்டு. மேற்கு — M. சின்னத்தம்பிக்கும், பங்காளருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு— முத்தர் வேலுப்பிள்ளைக்கும், கந்தன் கைம்பெண் ஆச்சிக்குட்டியின் உரிமைக்காரருக்கும் உரிய ஆதனங்கள். தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் ½பங்கும் துர்வை வழிவாய்க்காலும். இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்

சித்தங்கேணி, 28-7-1962

128/62

---

# நினைவு கூருங்கள்

3-ம் வருட
## மரண ஞாபகம்

பிறப்பு: 27—5—1914 இறப்பு: 11—8—1959

"என் வாழ்நாட்கள் எல்லாம்
மின்னலைப்போல் மறைந்துபோயின."

எங்கள் சிருட்டிகரும், இரட்சகருமான சருவேசுரா! எங்களை விட்டுப் பிரிந்துபோன கஸ்பார் போல் செல்லையா அந்தோனிப்பிள்ளையின் ஆத்துமத்தை உமது பரிசுத்தவான்களின் திருக்கூட்டத்தில் சேர்த்து, அவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும், ஆமென்.

வாழ்விலே இவரை நேசித்தவர்களே! மரணத்திலும் மறவாதீர்கள்.

இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக 11-8-62 சனிக்கிழமை காலை முகத்துவாரம், அர்ச் அந்திரேசியார் தேவாலயத்தில் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் சகலரும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவாகக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரை இழந்து துயருறும்
மனைவி - மக்கள்

130/62

---

முதல்வருட
## மரண ஞாபகம்

பிறப்பு: 27—5—1894 இறப்பு: 11—8—1961

நித்திய பிதாவே! யேசுக்கிறீஸ்துநாதருடைய விலைமதியாத திருஇரத்தத்தைப் பார்த்து, மரணித்துப்போன சுவக்கிம் பெர்னாண்டிஸ் ஆத்துமத்தின் பேரில் இரக்கமாயிரும்.

இந்த ஆத்தும நித்திய இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணமேற்றிராசன தேவாலயத்தில் 11-8-62 சனிக்கிழமை காலை 6-15மணிக்குத் துக்கப்பாடற்பூசை நடைபெறும். இதனைக் கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆத்மா சாந்தியடைய இப்பூசையில் பங்குபெறும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

11, டேவிற்றோட்,
யாழ்ப்பாணம்.

137/62

---

திருமதி
பேர்னதேத்தம்மா பிரான்சிஸ் அவர்கள்
அமரத்துவமடைந்த
## முதலாம்வருட நினைவு

பிறப்பு: 6-7-1916 இறப்பு: 12-8-1961

இவளின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும் ஆவணிமாதம் 11-ந்திகதி சனிக்கிழமை (11-8-62) காலை 6மணியளவில் பருத்தித்துறை, அர்ச். தொம்மையப்பர் ஆலயத்தில் ஒருதுக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதைக்கண்ணுறும் வண. குருக்கள், சங். சந்நியாசு கன்னியாஸ்திரிகள் பந்துமித்திரர்கள் அனைவரும் இவளின் ஆத்துமநித்தியஇளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

"நித்திய இளைப்பாற்றியை இவவுக்குக்
கொடுத்தருளும் சுவாமி!
சமாதானத்தில் இளைப்பாறுவாளாக"

இவளின் பிரிவால் துயருறும்
அருமைப்பத்தா: ம. பிரான்சிஸ்சும், பிள்ளைகளும், சகோதர சகோதரிகளும்.

121/62

---

முதல் வருட
## மரண ஞாபகம்



கோ. அந்தோனி பேர்னண்டோ
(ஊர்காவற்றுறை)

ஜனனம்: 6-7-1895
மரணம்: 9-8-1961

"யாருடைய ஞாபகம் அநேகரால்
கொண்டாடப்படுகிறதோ
அவர் சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் உகந்தவர்."
"சீவியத்தில் நாம் அவரை நேசித்தோம்;
மரணத்தின்பின்னும் அவரை மறவாதிருப்போம்."

### செபம்

ஓ, அணைகடந்த திருப்பாடுகளே! ஓ, ஆழமான திருக்காயங்களே! ஓ, இரத்தப் பிரளயமே! ஓ, மிகக் கொடூரமான மரணமே! ஓ, மிகவும் மதுரமான யேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கும் பொழுது அனுபவித்த கொடிய வேதனையையும், அளவில்லாத கஸ்தி துன்பங்களையும் பார்த்து, உமது அடியானாகிய **கொ. அந்தோனி பெர்னண்டோ** ஆத்துமத்தை இரட்சித்து, உமது மோட்ச இராச்சியத்தின் செல்வ பாக்கியங்களுக்கும், நித்தியானந்த சந்தோஷத்துக்கும் பங்காளியாகக் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.

[பர - பிரி - திரி]

கணவனை இழந்து துயருறும் பாரியார்
அ. பொன்னுக்குட்டி

நடுத்தெரு,
ஊர்காவற்றுறை.

136/62

---

திரு. எஸ். லூயிஸ் அவர்களின்
## தேகவியோகம்

சின்னரோமை என்று சிறப்புப்பெயர் பெற்ற சில்லாலையம்பதி வாசரான திரு. சவிரிமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனான திரு. எஸ். லூயிஸ் அவர்கள் கடந்த மூன்றுவருட காலமாக வயிற்றுநோயால் வருந்தி, இறுதியில் தனது 48-வது வயதில் ஆடி 28-ந் திகதி சனிக்கிழமை காலை 5 மணியளவில் கடைசித் தேவதிரவிய அனுமானங்களை ஆசையுடன் பெற்றுப் பரலோக ஆச்சியைப் பலமுறை அழைத்து ஆழ்ந்தநித்திரையானார்.

அடுத்தநாள் பிற்பகல் 5 மணியளவில் இவரது சடலமானது அழகிய பேழையில் வைக்கப்பெற்று, நண்பர்கள் பலரால் மாறிமாறிச் சுமந்துசெல்லப்பெற்று, முக்குரவர்கள் துக்கசங்கீதம் பாடிச்செல்லப் பெருந்திரளாகக் கூடிய இனசனர், சிநேகிதர், பெரியோர் சமூகத்திலே பூமதானம் செய்யப்படலாயிற்று.

இவர் மதுபரிபாலன இலாகாவில் சேர்ந்து யாழ்ப்பாணம், அச்சுவேலி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, ஜாயெல, கழுத்துறை முதலாம் இடங்களில் கடமையாற்றி, எல்லோரது நன்மதிப்பையும் பெற்றுவிளங்கினார். இவரது திறமையையும், வீரத்தையும் கண்ட மதுபரிபாலனப்பகுதி இவரைச் சார்ஜன் பதவிக்கு உயர்த்தியது. பதவி, பணம் என்பன இவருக்கு இன்பத்தைக் கொடுக்கவில்லை. மற்றோர் வாழவேண்டும், வாழவைக்க வேண்டுமென்பதே இவரின் ஏக ஆவல். இளமையிற் கற்கமுடியாவிட்டாலும், முதுமையிற் பல அறிவுச்சுடர் பொதிந்த நூல்களைக் கற்றார். இலக்கண இலக்கியங்களிற் பாண்டித்தியம் பெற்றார். ஆங்கிலம், சிங்களம் என்பவற்றிற் தேறினார். பகிரங்க மேடைகளிற் பேசுவார். சகாயமாதா பேரில் பல பாடல்களைப் பாடினார். பல நாடகங்களில் தோன்றிப் புகழ் ஈட்டினார்.

இவரின் ஆன்மாசாந்தியடையச் சென்ற செவ்வாயன்று (7-8-62) கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலிற் துக்கப் பூசையொன்று நிறைவேற்றப்பட்டது. இதனைக் கண்ணுறும் கிறீஸ்தவசகோதரர்கள் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவர் பிரிவால் துயருறும்
மனைவி - மக்கள் - மருமக்கள்

---

ஸ்பானிய விமானப்படையைச் சேர்ந்த விசாரணைக்குரவர்களிலொருவரான வண. அக்குயிலினோ அடிகளார் அண்மையில் 'பாரசூட்' கவசத்திலிருந்து குதிக்கும்போது ஏற்பட்டவிபத்தினால் காலமானார். நாற்பத்தொரு வயதான அடிகளார் இதுவரை 200 தடவைகட்குமேல் 'பாரசூட்'டில் வெற்றிகரமாக இறங்கியிருக்கிறாராம்.

---

## பாதுகாவலன் விளம்பர விதிதங்கள்

| | |
|---|---|
| **நன்றித் துதி :** | |
| ஒரு அங்குலத்துக்குள் | 2-00 |
| மேற்படும் ஒவ்வொரு அங்குலத்துக்கும் அல்லது அங்குலத்தின் பகுதிக்கும் | 2-00 |
| **மரண ஞாபகம் :** | |
| ஐந்து அங்குலத்துக்குள் | 10-00 |
| மேற்படும் ஒவ்வொரு அங்குலத்துக்கும் அல்லது அங்குலத்தின் பகுதிக்கும் | 2-00 |
| **மரண அறிக்கை :** | |
| ஆறு அங்குலத்துக்குள் | 12-00 |
| மேற்படும் ஒவ்வொரு அங்குலத்துக்கும் அல்லது அங்குலத்தின் பகுதிக்கும் | 2-00 |
| **கோட்டு விற்பனவு :** | |
| ஏழு அங்குலத்துக்குள் | 15-00 |
| மேற்படும் ஒவ்வொரு அங்குலத்துக்கும் அல்லது அங்குலத்தின் பகுதிக்கும் | 3-00 |

மற்றும் விபரங்கட்குக் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்.

ஆசிரியர்,
ச. வே. பாதுகாவலன்,
மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோபணமானள்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

னுக்கு ஒரு இரட்சகரை அனுப்ப வாக்களித்தார். ஆனல், பசாசை நோக்கியே "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும், பெண்ணின் வித்துக்கும் பகையை மூட்டுவேன்; அவள் உன்னுடைய தலையை நசுக்குவாள்" என்ருர். இது மரியம்மாளைப்பற்றிப் பசாசுக்குக்கூறிய கூற்று. கடவுளின் சித்தப்படி அவள் பசாசின் தலையை நசுக்கவேண்டுமாளுல், அதனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருக்க முடியாது. பாவத்துக்குப் பரிகாரமான சரீர அழிவை அவளது சரீரம் அடைந்திருக்க முடியாது. ஏற்கனவே பாவக்கறை அற்றுப் பிறந்து பசாசின் தலையை நசுக்கியவள், தன் ஆன்மசரீர மோட்சப் பிரவேசத்திஞல் பசாசின்மீது அவள் முழுவெற்றி பெற்ருள்.

எனவேதான், நம் அவனியின் அன்னை, அருள்மரி, விண்ணுலகத்திற்கு வெற்றி வீரத்துடன் ஆரோபணமானள். இது மறுக்கமுடியாத திருமறையின் உண்மை. இதற்குச் சான்ருக இங்கு கொடுக்கப்பட்டவை ஒரு சில காரணங்களே.

## அதனல் அவளுக்கு?

தேவதாயின் மோட்ச பிரவேசத்தின் மகிமை அவள் இவ்வுலகில் தேவகுமாரனுக்குக் கொடுத்த வரவேற்புக்கு ஒப்பாய் இருந்தது. சம்மனசுமூலம தன் சம்மதத்தைக்கேட்ட சருவேசுரனுக்கு கன்னிமரி, இதோ உம்முடைய அடிமையானவள் என்றுபதில் அளித்தாள். இச்சிறு பதிலில், தன் வாழ்வு முழுவதையும் ஆண்டவருக்கு அர்ப்பணித்தாள். அவர் சித்தத்தைத் திறம்படச் செய்துமுடித்தாள். இனி அவளை மகிமைப்படுத்துவது கடவுளின் செயல்.

தாய்மரி, யேசுவுடன் சேர்ந்து அவருடைய தாழ்மையிலும், பாடுகளிலும் பங்கு கொண்டாள். அதேபோல் இப்பொழுது யேசுவின் மகிமையிலும், மகிழ்ச்சியிலும் பங்குகொள்ள மரியம்மாள் மோட்சத்துக்கு ஆரோபணமானள்.

சுருங்கக்கூறின், தன்னை உண்டாக்கிய இறைவனேடு பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளாகத் தெரிந்தெடுக்கப்பட்டுத் தேவனேடுஒன்றிக்கப்பட்டாள். இறைவனை முகமுகமாய்த் தரிசிக்கும் பாக்கியத்தை அடைந்தாள். பேரானந்தத்தில் மிதந்தாள். மோட்சத்திற்கு ஆரோபணமானவள் அங்கு மோட்சவாசிகளிஞல் வரவேற்கப்பட்டு மூவுலகிற்கும் அரசியாக முடிசூட்டப்பட்டாள். மனுக்குலத்தில் பிறந்தவள் அவள். ஆனல், இப்பொழுது சகல சம்மனசுகளுக்கும் மோட்சவாசிகளுக்கும் மேலாக உயர்த்தப்பட்டிருக்கிருள்.

## அதனல் நமக்கு?

மனிதன் மரிப்பது நிச்சயம். ஆனல் அதன்பிறகு? தேவதாய் நமக்கு வழிகாட்டி. அவளைக் கண்டுபாவித்து, பரிசுத்ததனத்திலும் தேவஅன்பிலும் நாம் வளரவேண்டும். மரியம்மாள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதுபோல் நாமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும். நம் வாழ்வை மாற்றி அமைக்கவேண்டும். நமது ஒவ்வொரு செயலும் கிறிஸ்துவின் சித்தத்திற்குச் சாட்சி பகரவேண்டும். அப்பொழுது யேசுநாதர் எப்படித் தேவதாயாரை ஏற்றுக்கொண்டாரோ அப்படியே நம்மையும் ஏற்றுக்கொள்ளுவார்.

'ராஜ்'

# பேசும் பேனு

## பிரமுகர் யார்?

1947-ல் இலங்கையிலுள்ள மரியாயின் சேனைப்பிரசீடியங்களைத் தரிசிப்பதற்காக அயர்லாந்திலிருந்து அனுப்பப்பட்ட பிரதிநிதி சகோதரர் யோண் மறே என்பவர். சரியாக விடையனுப்பியவர்கள்; டொறற்ரு பத்திநாதர், றெக்கிளமேசன், யாழ்ப்பாணம்; ருஜேஸ்வரி சூசைப்பிள்ளை, யாழ்ப்பாணம.

## திருச்சபையின் இளவரசர்கள்

திருச்சபையின் இளவரசர்கள்என அழைக்கப்படுபவர்களாகிய கர்திஞல்மாரில் அண்மையில் ஒருவர் காலஞ்சென்றுவிட்டார். இதஞல் கர்திஞல்மார் தொகை 86 ஆகக் குறைந்துளது. அருளப்ப பாப்பரசர் திருச்சபையின் தலைவராகிய பின்னர் செய்த முக்கியதோர் அலுவல் பொதுவாக கர்திஞல்மார் திருச்சங்கத்தில் உலகின் பிரதான நாடுகளெல்லாம் பங்குகொள்ளச் செய்ததுதான். அவரது நியமனங்களின்பயனக உலகின் பிரதான தேசங்களனைத்தும் கர்திஞல்களைக்கொண்டிருக்கின்றன. எமது இவ்வாரத்திய வினவும் கர்திஞல்மாரைப்பற்றியதுதான்.

உலகின் எந்தெந்தத் தேசங்கள் கர்திஞல்மாரைக் கொண்டிருக்கின்றன? அத்தேசங்களில் எத்தனை கர்திஞல்மார் உளர்? இதற்காய விடையை பேசும்பேனு, சத்தியவேதபாதுகாவலன், மேற்றிராசன மாளிகை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## நகைச்சுவை:

அதிகாலை. மணி நான்கு. அடைவு பிடிக்கும் அன்பழகனின் வீட்டில் தொலைபேசி மணி கணகணவென்றடித்தது. முணுமுணுத்தவாறே படுக்கையிலிருந்து எழுந்த அன்பழகன் தொலைபேசியைக் காதில்மாட்டினர்.

இப்போது நேரம் என்ன? என மறுமுனையிலிருந்து ஒரு குரல் கேட்டது.

யார் அந்த மடையன்? அதிகாலையில் எனது நித்திரையைக் குழப்பினதுமல்லாமல் நேரமும் கேட்டுக் கேலிசெய்கிருய்? என ஆத்திரத்துடன் கூறினர் அன்பழகன்.

ஆத்திரப்படாதீர்கள் ஐயா. எனது கைக்கடிகாரத்தை உங்களிடம் அடைவு வைத்திருக்கிறேன். குழந்தைக்குப் பால்கரைப்பதற்காக நேரம் என்னவென்பதை அறியவேண்டியிருக்கிறதுஎன மறுமுனையிலிருந்து பதில் வந்தது.

## கடைசிவரை யாரோ?

இலங்கைவானெலி வர்த்தக ஒலிபரப்பைக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

வீடுவரை உறவு.
வீதிவரை மனைவி.
காடுவரை பிள்ளை.
கடைசிவரை யாரோ?

என்ற இன்னிசை காதில் விழுந்தது. என்சிந்தனையையும் அது கிளறிவிட்டது. என்ன அருமையான பாடல். கடைசிவரை யாரோ? சிந்தித்தால் எங்கள் பாவபுண்ணியங்கள்தான் என்பது புலனுகும்.

## வேதப்பரப்புதலில் அயர்லாந்து:

மேற்படி மகுடம்கொண்ட அழகியதோர் நூலை அயர்லாந்துதேசத்திலிருந்து ஒரு அன்பர் அனுப்பியிருக்கிருர். அதிலிருந்து சில புள்ளிவிபரங்களை நேயர்கட்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

அயர்லாந்தைச் சேர்ந்த 1945குருக்களும், 541சந்நியாசிகளும் 3072 புதுவேதநாடுகளில் வேதப்பரப்புதலில் ஈடுபட்டிருக்கின்றனர். இலங்கையில் தற்போது ஐரிஸ் குருக்களெவரும் இல்லை. ஒரு சந்நியாசியும், 186கன்னியர்களும் அப்போஸ்தலிக்க அலுவலில் ஒத்துழைக்கின்றனர்.

வெளிநாடுகளில் வேதப்பரப்புதலில் ஈடுபடுத்தும் குருத்துவ, சந்நியாச, கன்னியாஸ்திரிகளின்சபைகள் அங்கு இயங்கிவருகின்றன. கத்தோலிக்க திருச்சபையின் போதகர்கட்கு உறுதுணையாக விளங்கிவரும் மரியாயின் சைனியம் ஸ்தாபிக்கப்பட்டு வெற்றிகரமாக உலகம் முழுவதிலும் நிர்வகிக்கப்பட்டுவருவதற்குக் காரணமும் அயர்லாந்துதானே.

## இரண்டு வேதசாட்சிகள்:

அந்தப் புனிதரைக்கொல்லுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர் செய்த குற்றம்? கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்ததுதான். எனவே, கொலையாளிகள் அவரை வழக்கம்போல ஊருக்கு வெளியே அழைத்துச் சென்றனர். மரணதண்டனை பெறுமிடத்தைச் சேர்வதற்கு ஓர் ஆற்றைக் கடக்கவேண்டியதாயிற்று. ஆறு பெருக்கெடுத்தோடியது. எனவே, ஆற்றைக் கடப்பது சாத்தியமற்றதாயிற்று. அப்புனிதர் இறைவனை நோக்கிப்பிரார்த்தித்தார். ஆறு பிரிந்தது. புனிதருக்கு வழிவிட்டது. இந்தஆச்சரியத்தைக் கண்ட அவரது கொலையாளி மனந்திரும்பிஞன். அவருடன் தானும் இறக்க உத்தரம் கேட்டான்.

இவ்விதமே வேதசாட்சியாகமரிக்கும் தருணத்தில் கொலையாளியையும் மனந்திருப்பி அவனும் வேதசாட்சி முடிபெறக் காரணமாயிருந்தவர்தான் ஆங்கிலநாட்டில் முதன்முதல் வேதசாட்சி முடிபெற்ற அர்ச். அல்பான் என்பவராவர்.

# அன்னையின் படையணி........

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

பத்தில் சிங்களம்பேசும் சேனையாளர் ஒன்றுகூடினர். தமிழ் பேசும் படையணியினர் கொட்டாஞ்சேனை வாலிபர்கழக மண்டபத்தில் திரண்டனர். ஆங்கிலம் பேசுவோர் நல்லாயன் கன்னியர் கழகத்தில் சேர்ந்தனர். அங்கே அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் மரியன்னை அவர்கட்காகக் காத்திருந்தாள்.

அனைவரும் முழந்தாளிட்டு ஆரம்ப செபங்களையும் செபமாலையையுமோதினர். பின்னர் வண அலெக்ஸ் பெர்ஞண்டோ, வண நேருஸ் பெர்ஞண்டோ என்போர் சிங்களத்திலும், வண. சவிரிமுத்து, வண. விஜயரத்தினம் என்போர் தமிழிலும், வண. நேருஸ் பெர்ஞண்டோ, வண. மெனிக்முத்துக்குமாரு என்போர் ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்தினர். சேனையின் பாதையில் இருபத்தைந்து வருடங்கள், சேனை அப்போஸ்தலத்தில் புதிய வழிகள், ஒரு சேனையாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது யாது என்ற தலைப்புகள் உரையாடலில் குறிப்பிடத்தக்கவை.

காலை மணி பதினென்று; சேனையாளர் அதிமேற்றிராசனக்கோவிலில் ஒன்றுதிரண்டனர். அதிமேற்றிராணியாரவர்கள் சேனையாளரின் கருத்துகட்காகத் திவ்வியபூசை நிறைவேற்றினர். மதிய உணவின் பின்னர் அயலவரின் அவதானிப்பில் நாம் என்ற பொருள்பற்றிக்கலந்துரையாடல் நடைபெற்றது.

மாலை நிகழ்ச்சிகள் விழாவுக்குச் சிகரம் வைப்பதாயமைந்தன. கல்லூரி மைதானத்திலிருந்து ஐயாயிரத்துக்குமதிகமான சேனையாளர்கள் சந்தலூசியா ஆசனக்கோவிற் சதுக்கத்துக்கு அணிவகுத்துச் சென்றனர். அவர்களது உதடுகள் செபமாலையையோதிக் கொண்டிருந்தன. சதுக்கத்துக்கு ஊர்வலம் சென்றதும் அதிமேற்றிராணியாண்டவரவர்கள் சேனையாளரை வரவேற்றுச் சொற்பொழிவொன்று நிகழ்த்திஞர். கடந்தகாலச் சேவைகட்காக அவர்களைப் பாராட்டிஞர். சத்திய திருச்சபையின் குருமாருடன் ஒத்துழைத்து அவர்களாற்றிய தொண்டுகட்காக நன்றிகூறிஞர். வருங்காலத்தில் அவர்கள் கடைப்பிடிக்கவேண்டியவைகளை வற்புறுத்திஞர்.

பின்னர் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துடனும் முடிவுசெபத்துடனும் இலங்கை மரியாயின்சைனிய இருபத்தைந்தாவது வருடவிழா முடிவுற்றது.

❀ மணிலாவில் பிரசுரிக்கப்படும் பிலிப்பைன்ஸ் கெறல்ட் என்ற பிரசித்தி பெற்றதும் அதிக விநியோகமுள்ளதுமான தினசரிப்பத்திரிகை தற்போது ஞாயிற்றுக்கிழமைகளில் நாலுபக்க கத்தோலிக்க செய்திகளையும் கட்டுரைகளையும் தாங்கிவரும் அனுபந்தமொன்றையும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிரசுரித்துவருகிறது.

## எனது ஆபிரிக்க யாத்திரை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னவு உதவியாளர்கள் கொள்வனவுசெய்வோரிடம் பணிவாகவும், பண்புடனும் நடந்துகொள்கின்றனர்.

வர்த்தக நிலையங்களிலிருந்து ஜெனேவாவின் செல்வவளத்தை நன்கு அளவிடமுடியும். இந்நிலையங்கள் கடந்த இரண்டாவது உலகப்பெரும் போரின் போது அதிகம்பாதிக்கப்பட்டன. அதற்கான சான்றுகள் இன்றும் காணக் கூடியதாயுள்ளன. மங்களவார்த்தையிஞலயங்கூட திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. இதுவும் யுத்தகாலத்தின் அதிக அழிவுபெற்ற கட்டிடங்களில் ஒன்று.

இந்நகரில்தான் அமெரிக்காவைக் கண்டுபிடித்த கிரிஸ்ரோபர் கொலம்பஸ் 1470-ல் பிறந்தார். அவரது இல்லம் கடைத்தெருவிலிருந்து சிறிதுதொலைவில் உள்ளது. அரசினர் இவ்வில்லத்தைப் பாதுகாத்துவருகின்றனர். கொலம்பஸ் ஞானமுழுக்குப்பெற்ற அர்ச். முடியப்பர் தேவாலயத்தையும் நாம் பார்வையிட்டோம்.

நகரின் மத்தியசதுக்கத்தில் கொலம்பஸின் நினைவுச்சின்னமொன்று ரெயில் நிலையத்தை எதிர்நோக்கியவண்ணம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. 1849 இல் இது நிறுவப்பட்டது. கொலம்பஸின் சிலையைத் தாங்கிநிற்கும் ஸ்தம்பத்தின் நான்குபுறத்திலும் சமயம், புவியியல், அறிவாற்றல், தைரியம் என்பவைகளைக்குறிக்கும் சிற்பங்களை அமைத்திருக்கிருர்கள். கொலம்பஸின் பாதத்தண்டையில் அமெரிக்காவின் மாதிரிஉருவம் அமைக்கப்பட்டுள்ளது.

(வளரும்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 26, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday August 12 -1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org